**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# 2009 ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம்

**(எண் 35/2009)**

( 2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# THE RIGHT OF CHILDREN TO FREE AND COMPULSORY EDUCATION ACT, 2009

**(No. 35 of 2009)**

(As on 31st October, 2023)

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை – 600 028.

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# 2009 ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம்

(எண் 35/2009)

# THE RIGHT OF CHILDREN TO FREE AND COMPULSORY EDUCATION ACT, 2009

(No. 35 of 2009)

# PREFACE

This edition of The Right of Children to Free and Compulsory Education Act, 2009 (No. 35 of 2009) as on 31st October, 2023 containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 5th February, 2019 on Pages from 16 to 35.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Text (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the Authoritative Texts of the Act in Tamil.

New Delhi.
5th February, 2019

*(Signed)……*
*Secretary to Government.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள 2009 ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம் (எண் 35/2009) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2019, பிப்ரவரி 5 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின், சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 16 முதல் 35 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிப்பெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புதுதில்லி (ஒப்பம்)......
5, பிப்ரவரி 2019 இந்திய அரசு செயலாளர்.

# THE RIGHT OF CHILDREN TO FREE AND COMPULSORY EDUCATION ACT, 2009

**(No. 35 of 2009)**

**CONTENTS**

**Sections** **Pages**

**CHAPTER I**

**PRELIMINARY**

1. Short title, extent application and commencement. 1
2. Definitions. 1

**CHAPTER II**

**RIGHT TO FREE AND COMPULSORY EDUCATION**

3. Right of child to free and compulsory education. 5
4. Special provisions for children not admitted to, or who have not completed, elementary education. 6
5. Right of transfer to other school. 6

**CHAPTER III**

**DUTIES OF APPROPRIATE GOVERNMENT, LOCAL AUTHORITY AND PARENTS**

6. Duty of appropriate Government and local authority to establish school. 7
7. Sharing of financial and other responsibilities. 7
8. Duties of appropriate Government. 8
9. Duties of local authority. 9
10. Duty of parents and guardian. 11
11. Appropriate Government to provide for pre-school education. 11

# 2009 ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம்

**(எண் 35 / 2009)**

## பொருளடக்கம்

**பிரிவுகள்** **பக்கங்கள்**

**அத்தியாயம் I**

**முன்னுரை**


1. குறுந்தலைப்பு, அளாவுகை பொருந்துகை மற்றும் தொடக்கம். 1

2. பொருள் வரையறைகள். 1


**அத்தியாயம் II**

**இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமை**


3. இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தையின் உரிமை. 5

4. தொடக்கக் கல்விக்கு சேர்க்கப்பட்டிராத அல்லது முடித்திராத குழந்தைகளுக்கான சிறப்பு வகையங்கள். 6

5. பிற பள்ளிக்கு மாறுவதற்கு உரிமை. 6


**அத்தியாயம் III**

**உரிய அரசு, உள்ளாட்சி அதிகார அமைப்பு மற்றும் பெற்றோர்களின் கடமைகள்**


6. பள்ளியை நிறுவுவதற்கு உரிய அரசு மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்பின் கடமை. 7

7. நிதியியல் மற்றும் பிற பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளுதல். 7

8. உரிய அரசின் கடமைகள். 8

9. உள்ளாட்சி அதிகாரஅமைப்பின் கடமைகள். 9

10. பெற்றோர் மற்றும் காப்பாளரின் கடமை. 11

11. உரிய அரசு, மழலையர் பள்ளிக் கல்விக்கு வகை செய்தல். 11

## CHAPTER IV

## RESPONSIBILITIES OF SCHOOLS AND TEACHERS


| | | |
|---|---|---|
| 12. | Extent of school's responsibility for free and compulsory education. | 11 |
| 13. | No capitation fee and screening procedure for admission. | 13 |
| 14. | Proof of age for admission. | 13 |
| 15. | No denial of admission. | 13 |
| 16. | Prohibition of holding back and expulsion. | 14 |
| 17. | Prohibition of physical punishment and mental harassment to child. | 14 |
| 18. | No school to be established without obtaining certificate of recognition. | 14 |
| 19. | Norms and standards for school. | 15 |
| 20. | Power to amend Schedule. | 16 |
| 21. | School Management Committee. | 16 |
| 22. | School Development Plan. | 17 |
| 23. | Qualifications for appointment and terms and conditions of service of teachers. | 17 |
| 24. | Duties of teachers and redressal of grievances. | 18 |
| 25. | Pupil-Teacher Ratio. | 19 |
| 26. | Filling up vacancies of teachers. | 20 |
| 27. | Prohibition of deployment of teachers for non-educational purposes. | 20 |
| 28. | Prohibition of private tuition by teacher. | 20 |

## அத்தியாயம் IV

## பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்புகள்


| | | |
|---|---|---|
| 12. | இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்குவதற்கு பள்ளிகளுக்குள்ள பொறுப்பின் அளாவுகை. | 11 |
| 13. | மாணவர் சேர்க்கையின் போது நுழைவு நன்கொடை மற்றும் கழிப்பு நெறிமுறை எதுவும் இருத்தல் ஆகாது. | 13 |
| 14. | மாணவர் சேர்க்கைக்கான வயதுச் சான்று. | 13 |
| 15. | மாணவர் சேர்க்கை மறுக்கப்படுதல் ஆகாது. | 13 |
| 16. | தேர்வம் குறித்தசில நேர்வுகளில் நிறுத்திவைத்துக் கொள்ளுதலும். | 14 |
| 17. | குழந்தைக்கு உடலியல் தண்டனை மற்றும் மனவியல் தீங்கிற்குத் தடை. | 14 |
| 18. | அங்கீகாரச் சான்றிதழ் பெறப்படாமல் பள்ளி எதுவும் நிறுவப்படுதல் ஆகாது. | 14 |
| 19. | பள்ளிக்கான நெறிமுறைகள் மற்றும் தரங்கள். | 15 |
| 20. | இணைப்புப்பட்டியலைத் திருத்துவதற்கு அதிகாரம். | 16 |
| 21. | பள்ளி மேலாண்மைக் குழு. | 16 |
| 22. | பள்ளி வளர்ச்சித் திட்டம். | 17 |
| 23. | ஆசிரியர்களின் பணியமர்த்தத்திற்கான கல்வித்தகுதிகள், பணி வரையுரைகளும், வரைகட்டுக்களும். | 17 |
| 24. | ஆசிரியர்களின் கடமைகள் மற்றும் குறைகளைத் தீர்த்து வைத்தல். | 18 |
| 25. | மாணவர் ஆசிரியர் விகிதம். | 19 |
| 26. | ஆசிரியர்கள் காலியிடங்களை நிரப்புதல். | 20 |
| 27. | கல்வி சாராத நோக்கங்களுக்காக ஆசிரியர்களை அனுப்புவதற்குத் தடை. | 20 |
| 28. | ஆசிரியர்களால் சொந்தமாக தனி போதனை செய்வதற்குத் தடை. | 20 |

## CHAPTER V

## CURRICULUM AND COMPLETION OF ELEMENTARY EDUCATION

29. Curriculum and evaluation procedure. 20

30. Examination and completion certificate. 21

## CHAPTER VI

## PROTECTION OF RIGHT OF CHILDREN

31. Monitoring of child's right to education. 21

32. Redressal of grievances. 22

33. Constitution of National Advisory Council. 23

34. Constitution of State Advisory Council. 23

## CHAPTER VII

## MISCELLANEOUS

35. Power to issue directions. 23

36. Previous sanction for prosecution. 24

37. Protection of action taken in good faith. 24

38. Power of appropriate Government to make rules. 24

39. Power of Central Government to remove difficulties. 26

SCHEDULE

## அத்தியாயம் V

## தொடக்கக்கல்வி பாடத்திட்டம் மற்றும் அதனை முடித்தல்


29. பாடத்திட்டம் மற்றும் கணிப்பாய்வு நெறிமுறை. 20

30. தேர்வு மற்றும் முடித்தலுக்கான சான்றிதழ். 21


## அத்தியாயம் VI

## குழந்தைகளின் உரிமையினைப் பாதுகாத்தல்


31. கல்விக்கான குழந்தையினுடைய உரிமையை கண்காணித்தல். 21

32. குறைகளைத் தீர்த்து வைத்தல். 22

33. தேசியத் தேர்வுரை மன்றத்தை அமைத்தல். 23

34. மாநிலத் தேர்வுரை மன்றத்தை அமைத்தல். 23


## அத்தியாயம் VII

## பல்வகை


35. பணிப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரம். 23

36. குற்றவழக்கு தொடர்வதற்கு முன் ஒப்பளிப்பு. 24

37. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. 24

38. விதிகளைச் செய்வதற்கு உரிய அரசுக்குள்ள அதிகாரம். 24

39. இடர்ப்பாடுகளை நீக்க மைய அரசிற்குள்ள அதிகாரம். 26

**இணைப்புப்பட்டியல்**

# THE RIGHT OF CHILDREN TO FREE AND COMPULSORY EDUCATION ACT, 2009

## (No. 35 of 2009)

[26th August, 2009.]

An Act to provide for free and compulsory education to all children of the age of six to fourteen years.

BE it enacted by Parliament in the Sixtieth Year of the Republic of India as follows:—

## CHAPTER I

## PRELIMINARY

[1][Short title, extent, application and commencement.]

1. (1) This Act may be called the Right of Children to Free and Compulsory Education Act, 2009.

(2) It shall extend to the whole of india [2] ****

(3) It shall come into force on such date[3] as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

[4][(4) Subject to the provisions of articles 29 and 30 of the Constitution, the provisions of this Act shall apply to conferment of rights on children to free and compulsory education.

(5) Nothing contained in this Act shall apply to Madrasas, Vedic Pathsalas and educational institutions primarily imparting religious instruction.]

Definitions.

2. In this Act, unless the context otherwise requires,—

(a) " appropriate Government" means—

---

1. Subs. by Act 2 of 2018, s.3 and The Second Schedule, for "the marginal heading" (w.e.f. 05-01-2018).

2. The Words "except the State of Jammu and Kashmir" omitted by Act 34 of 2019, s.95 and the Fifth Schedule (w.e.f. 31-10-2019).

3. 1st April, 2010, *vide* notification No. S.O. 428(E), dated 16th February, 2010, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).

4. Ins. by Act 30 of 2012, s. 2 (w.e.f. 1-8- 2012).

# 2009 ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம்

## (எண் 35 / 2009)

[2009, ஆகஸ்ட் 26]

ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.

இது, இந்தியக் குடியரசின் அறுபதாவது ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

### அத்தியாயம் I

### முன்னுரை

[1][குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்].

**1.** (1) இந்தச் சட்டம், 2009 ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, [2]* * * * இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[3] செல்லாற்றல் பெறும்.

[4][(4) அரசியலமைப்பின் 29 ஆம் மற்றும் 30 ஆம் உறுப்புக்களின் வகையங்களுக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் வகையங்கள் குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமைகளை வழங்குவதற்குப் பொருந்துதல் வேண்டும்''.

(5) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் மதராஸாக்கள், வேத பாடசாலைகள் மற்றும் முதன்மை நிலையில் சமய போதனை அளிக்கும் கல்வி நிறுவனங்களுக்குப் பொருந்தாது.]

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) ''உரிய அரசு'' என்பது,—

---

1. சட்ட எண் 2/2018 இன் 3 ஆம் பிரிவு மற்றும் இரண்டாம் இணைப்புப்பட்டியலால் "ஓரத்தலைப்பிற்கு" மாற்றாக (05–01–2018 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.
2. சட்ட எண் 34/2019 இன் 95 ஆம் பிரிவு மற்றும் ஐந்தாம் ஆம் இணைப்புப்பட்டியலால் ''ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக'' என்ற சொற்கள் (31–10–2019 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டன.
3. 2010, ஏப்ரல் 01, 2010, பிப்ரவரி 16 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண்.எஸ்.ஓ. 428 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐ பார்க்க.
4. சட்ட எண் 30/2012 இன் 2 ஆம் பிரிவினால் (01–08–2012 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(i) in relation to a school established, owned or controlled by the Central Government, or the administrator of the Union territory, having no legislature, the Central Government;

(ii) in relation to a school, other than the school referred to in sub-clause (i), established within the territory of —

(A) a State, the State Government;

(B) a Union territory having legislature, the Government of that Union territory;

(b) "capitation fee" means any kind of donation or contribution or payment other than the fee notified by the school;

(c) "child" means a male or female child of the age of six to fourteen years;

(d) "child belonging to disadvantaged group" means [1][a child with disability or] a child belonging to the Scheduled Caste, the Scheduled Tribe, the socially and educationally backward class or such other group having disadvantage owing to social, cultural, economical, geographical, linguistic, gender or such other factor, as may be specified by the appropriate Government, by notification;

(e) "child belonging to weaker section" means a child belonging to such parent or guardian whose annual income is lower than the minimum limit specified by the appropriate Government, by notification;

[1][(ee) "child with disability" includes,—

(A) a child with "disability" as defined in clause (i) of section 2 of the Persons with Disabilities (Equal Opportunities, Protection of Rights and Full Participation) Act, 1995; 1 /1996.

---

1. Ins. by s. 3, Act. 30 of 2012 (w.e.f. 1-8-2012).

(i) மைய அரசால் அல்லது சட்டமன்றம் எதனையும் கொண்டிராத ஒன்றியத்து ஆட்சி நிலவரையின் ஆளுகையரால் நிறுவப்பட்ட, சொந்தமான அல்லது கட்டாளுகை செய்யப்படும் பள்ளி ஒன்று தொடர்பாக மைய அரசு என்று பொருள்படும்;

(ii) (i) ஆம் உட்கூறில் சுட்டப்பட்டுள்ள பள்ளிகள் அல்லாத—

(அ) மாநிலம் ஒன்றின் ஆட்சிநிலவரைக்குள் நிறுவப்பட்டுள்ள பள்ளி ஒன்று தொடர்பாக மாநில அரசு என்று பொருள்படும்;

(ஆ) சட்டப்பேரவையைக் கொண்டுள்ள ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒன்றின் ஆட்சிநிலவரைக்குள் நிறுவப்பட்டுள்ள பள்ளி ஒன்று தொடர்பாக அந்த ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் அரசு என்றும் பொருள்படும்;

(ஆ) ''நுழைவு நன்கொடை'' என்பது, பள்ளியால் அறிவிக்கை செய்யப்பட்ட கட்டணம் அல்லாத எவ்வகையினதுமான நன்கொடை அல்லது பங்களிப்பு அல்லது செலுத்தம் என்று பொருள்படும்;

(இ) ''குழந்தை'' என்பது, ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையுள்ள ஆண் குழந்தை அல்லது பெண் குழந்தை ஒன்று என்று பொருள்படும்;

(ஈ) ''வசதியற்ற தொகுதியைச் சார்ந்த குழந்தை'' என்பது, [1][''ஊனமுற்ற குழந்தை அல்லது''] பட்டியலில்கண்ட சாதி, பட்டியலில்கண்ட பழங்குடியைச் சார்ந்த சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த அல்லது சமுதாயம் சார்ந்த, பண்பட்ட நிலை சார்ந்த, பொருளியல் சார்ந்த, புவியியல் சார்ந்த, மொழிசார்ந்த, பால்வகை சார்ந்ததன் அல்லது உரிய அரசால் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற பொருண்மையின் காரணமாக வசதியற்ற நிலையைக் கொண்டுள்ள அத்தகைய பிற தொகுதியைச் சார்ந்த குழந்தை ஒன்று என்று பொருள்படும்;

(உ) ''நலிவுற்ற பிரிவைச் சார்ந்த குழந்தை'' என்பது, எந்த பெற்றோர் அல்லது காப்பாளரின் ஆண்டு வருமானம், உரிய அரசால், அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கப்பட்ட குறைந்த அளவு வரம்பிற்கும் குறைவாக இருக்கிறதோ அந்த பெற்றோர் அல்லது காப்பாளரைச் சார்ந்துள்ள குழந்தை ஒன்று என்று பொருள்படும்;

[1][(உஉ) ''ஊனமுற்ற குழந்தை'' என்பது,—

1 /1996. (அ) ஊனமுற்றோர் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப்பங்கேற்பு)ச் சட்டம் 1995 இன் 2 ஆம் பிரிவின் (ஐ) கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளவாறு ஓர் ''ஊனமுற்ற குழந்தை'';

---

1. சட்ட எண் 30/2012 இன் 3 ஆம் பிரிவினால் (01–08–2012 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(B) a child, being a person with disability as defined in clause (j) of section 2 of the National Trust for Welfare of Persons with Autism, Cerebral Palsy, Mental Retardation and Multiple Disabilities Act, 1999; 44 / 1999.

(C) a child with "severe disability" as defined in clause (o) of section 2 of the National Trust for Welfare of Persons with Autism, Cerebral Palsy, Mental Retardation and Multiple Disabilities Act, 1999,] 44 /1999.

(f) "elementary education" means the education from first class to eighth class;

(g) "guardian", in relation to a child, means a person having the care and custody of that child and includes a natural guardian or guardian appointed or declared by a court or a statute;

(h) "local authority" means a Municipal Corporation or Municipal Council or Zila Parishad or Nagar Panchayat or Panchayat, by whatever name called, and includes such other authority or body having administrative control over the school or empowered by or under any law for the time being in force to function as a local authority in any city, town or village;

(i) "National Commission for Protection of Child Rights" means the National Commission for Protection of Child Rights constituted under section 3 of the Commissions for Protection of Child Rights Act, 2005; 4 /2006.

(j) "notification" means a notification published in the Official Gazette;

(k) "parent" means either the natural or step or adoptive father or mother of a child;

44 / 1999. (ஆ) தற்புனைவு ஆழ்வு, மூளைச்சீர்குலைவு, மனவளர்ச்சிக் குறைபாடு மற்றும் பல்வகை ஊனமுடைய நபர்களின் நல்வாழ்விற்கான தேசியப் பொறுப்புக்கட்டளைச் சட்டம், 1999 இன் 2 ஆம் பிரிவின் (ஒ) கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளவாறான ஓர் ஊனமுற்ற நபராக இருக்கும், ஒரு குழந்தை;

44 /1999. (இ) தற்புனைவு ஆழ்வு, மூளைச்சீர்குலைவு, மனவளர்ச்சிக் குறைபாடு மற்றும் பல்வகை ஊனமுடைய நபர்களின் நல்வாழ்விற்கான தேசியப் பொறுப்புக்கட்டளைச் சட்டம், 1999 இன் 2 ஆம் பிரிவின் (ச) கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளவாறான ''கடுமையான ஊனமுற்ற'' ஒரு குழந்தை

ஆகியோரை உள்ளடக்கும்.]

(ஊ) ''தொடக்கக் கல்வி'' என்பது, முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலான கல்வி என்று பொருள்படும்;

(எ) குழந்தை ஒன்று தொடர்பாக ''காப்பாளர்'' என்பது, அந்தக் குழந்தையின் கவனிப்பையும், பாதுகாப்பையும் கொண்டுள்ள நபர் ஒருவர் என்று பொருள்படும் மற்றும் இயற்கை மரபு வழியான காப்பாளர் ஒருவரை அல்லது நீதிமன்றம் ஒன்றின் வாயிலாக அல்லது சட்டம் ஒன்றின் வாயிலாக அமர்த்தப்பட்ட அல்லது விளம்புகை செய்யப்பட்ட காப்பாளர் ஒருவரை உள்ளடக்கும்;

(ஏ) ''உள்ளாட்சி அதிகாரஅமைப்பு'' என்பது, எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், மாநகராட்சி அல்லது நகராட்சி மன்றம் அல்லது ஜில்லா பரிஷத் அல்லது நகர் ஊராட்சி அல்லது ஊராட்சி என்று பொருள்படும், மற்றும் பள்ளியின் மீது நிருவாகக் கட்டாளுகை கொண்டுள்ள அல்லது மாநகரம், நகரம் அல்லது கிராமம் எதிலும் உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒன்றாக செயற்பணிகளைப் புரிவதற்கு அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள, சட்டத்தாலோ அதன் வழியாலோ அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அத்தகைய பிற அதிகாரஅமைப்பு அல்லது குழுமத்தை உள்ளடக்கும்;

4/2006. (ஐ) ''குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம்'' என்பது, 2005 ஆம் ஆண்டு குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம் என்று பொருள்படும்;

(ஒ) ''அறிவிக்கை'' என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை ஒன்று என்று பொருள்படும்;

(ஓ) ''பெற்றோர்'' என்பது, குழந்தை ஒன்றின் இயற்கை மரபுவழி அல்லது மாற்றான் அல்லது மகவேற்பு தந்தை அல்லது தாய் என்று பொருள்படும்;

(l) “prescribed” means prescribed by rules made under this Act;

(m) “Schedule” means the Schedule annexed to this Act;

(n) “school” means any recognised school imparting elementary education and includes—

(i) a school established, owned or controlled by the appropriate Government or a local authority;

(ii) an aided school receiving aid or grants to meet whole or part of its expenses from the appropriate Government or the local authority;

(iii) a school belonging to specified category; and

(iv) an unaided school not receiving any kind of aid or grants to meet its expenses from the appropriate Government or the local authority;

(o) “screening procedure” means the method of selection for admission of a child, in preference over another, other than a random method;

(p) “specified category”, in relation to a school, means a school known as Kendriya Vidyalaya, Navodaya Vidyalaya, Sainik School or any other school having a distinct character which may be specified, by notification, by the appropriate Government;

(ஔ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(க) ''இணைப்புப்பட்டியல்'' என்பது, இந்தச் சட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்புப்பட்டியல் என்று பொருள்படும்;

(ங) ''பள்ளி'' என்பது, தொடக்கக் கல்வி கற்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி எதுவும் என்று பொருள்படும்;

மற்றும்—

(i) உரிய அரசால் அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒன்றால் நிறுவப்பட்ட, அதற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டாளுகையில் உள்ள பள்ளி ஒன்றை;

(ii) உரிய அரசிடமிருந்து அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பிடமிருந்து, முழுமையாகவோ, பகுதியாகவோ அதனுடைய செலவினங்களைச் சமாளிப்பதற்காக உதவி அல்லது மானியங்கள் பெறும் உதவிபெறும் பள்ளி ஒன்றை;

(iii) குறித்துரைக்கப்பட்ட வகையைச் சார்ந்த பள்ளி ஒன்றை; மற்றும்

(iv) உரிய அரசிடம் இருந்தோ, உள்ளாட்சி அதிகாரஅமைப்பிடமிருந்தோ அதனுடைய செலவினங்களைச் சமாளிப்பதற்கு எவ்வகையினதுமான உதவி அல்லது மானியங்களைப் பெறாமலிருக்கிற உதவிபெறா பள்ளி ஒன்றை

உள்ளடக்கும்;

(ச) ''கழிப்பு நெறிமுறை'' என்பது, அங்கொன்று இங்கொன்றாக எடுக்கப்பட்ட முறை ஒன்றில்லாத பிற, குழந்தை ஒன்றின் சேர்க்கைக்காக பிறிதொன்றின் மீது முன்னுரிமையில் எடுக்கப்பட்ட தேர்ந்தெடுப்பு முறை என்று பொருள்படும்;

(ஞ) பள்ளி ஒன்று தொடர்பாக ''குறித்துரைக்கப்பட்ட வகை'' என்பது, கேந்திரிய வித்யாலயா, நவோதயா வித்யாலயா, சைனிக் பள்ளி என்று அறியப்படுகிற பள்ளி ஒன்று அல்லது உரிய அரசால் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கப்படலாகும் தனி வேறான தன்மை ஒன்றைக்கொண்டுள்ள பிற பள்ளி எதுவும் என்று பொருள்படும்;

(q) "State Commission for Protection of Child Rights" means the State Commission for Protection of Child Rights constituted under section 3 of the Commissions for Protection of Child Rights Act, 2005. 4 /2006.

## CHAPTER II

## RIGHT TO FREE AND COMPULSORY EDUCATION

Right of child To free and compulsory education.

3. [1][(1) Every child of the age of six to fourteen years, including a child referred to in clause (*d*) or clause (*e*) of section 2, shall have the right to free and compulsory education in a neighbourhood school till the completion of his or her elementary education.]

(*2*) For the purpose of sub-section (*1*), no child shall be liable to pay any kind of fee or charges or expenses which may prevent him or her from pursuing and completing the elementary education.

[2]* * * * *

[3][(*3*) A child with disability referred to in sub-clause (*A*) of clause (*ee*) of section 2 shall, without prejudice to the provisions of the Persons with Disabilities (Equal Opportunities, Protection of Rights and Full Participation), and a child referred to in sub-clauses (*B*) and (*C*) of clause (*ee*) of section 2, have the same rights to pursue free and compulsory elementary education which children with disabilities have under the provisions of Chapter V of the Persons with Disabilities (Equal Opportunities, Protection of Rights and Full Participation) Act, 1995: 1 /1996.

Provided that a child with "multiple disabilities" referred to in clause (*h*) and a child with "severe disability" referred to in clause (*o*) of section 2 of the National Trust for Welfare of Persons with Autism, Cerebral Palsy, Mental Retardation and Multiple Disabilities Act, 1999 may also have the right to opt for home-based education.] 44 /1999.

---

1. Subs. by Act 30 of 2012, s. 4, for sub-section (*1*) (w.e.f. 1-8-2012).

2. Proviso omitted by Act 30 of 2012, s. 4 (w.e.f. 1-8-2012).

3. Ins. by s. 4, *ibid*. (w.e.f. 1-8-2012).

(ட) ''குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான
4/2006. மாநில ஆணையம்'' என்பது, 2005 ஆம் ஆண்டு குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநில ஆணையம் என்று பொருள்படும்.

## அத்தியாயம் II

## இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமை

இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தையின் உரிமை.

3. [1][(1) 2 ஆம் பிரிவின் (ஈ) கூறில் அல்லது (உ) கூறில் சுட்டப்பட்ட, ஒரு குழந்தை உள்ளடங்கலான, ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையுள்ள ஒவ்வொரு குழந்தையும், அவன் அல்லது அவள் தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் சுற்றுப்புறத்திலுள்ள பள்ளி ஒன்றில் இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்]

(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, குழந்தை எவரும், தொடக்கக் கல்வியினை தொடர்வதிலிருந்து மற்றும் முடிப்பதிலிருந்து அவனையோ, அவளையோ தடை செய்யலாகும், எவ்வகையினதுமான பள்ளிக்கூடக் கட்டணம் அல்லது கட்டணங்கள் அல்லது செலவினங்களைச் செலுத்துவதற்கு உள்ளாதல் ஆகாது.

[2]****

1/1996. [3][(3) ஊனமுற்றோர் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப்பங்கேற்பு) சட்டம், 1995 இன் வகையங்களுக்குக் குந்தகமின்றி (2) ஆம் பிரிவின் (உஉ) கூறின் (அ) உட்கூறில் சுட்டப்பட்ட ஓர் ஊனமுற்ற குழந்தையும், 2 ஆம் பிரிவின் (உஉ) கூறின் (ஆ) மற்றும் (இ) ஆகிய உட்கூறுகளில் சுட்டப்பட்ட ஒரு குழந்தையும், ஊனமுற்றோர் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப்பங்கேற்பு) சட்டம், 1995 இன் அத்தியாயம் V இன் வகையங்களின்படி ஊனமுற்ற குழந்தைகள், இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வியைத் தொடர்வதற்கு கொண்டிருக்கும் அதே உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** (ஏ) கூறில் சுட்டப்பட்ட ''பல்வகை
44/1999. ஊனமுடைய'' ஒரு குழந்தையும் தற்புனைவு ஆழ்வு, மூளைச்சீர்குலைவு, மனவளர்ச்சிக் குறைபாடு மற்றும் பல்வகை ஊனமுடைய நபர்களின் நல்வாழ்விற்கான தேசியப் பொறுப்புக்கட்டளைச் சட்டம், 1999 இன் 2 ஆம் பிரிவின் (ச) கூறில் சுட்டப்பட்ட ''கடுமையாக ஊனமுற்ற'' ஒரு குழந்தையும் இல்லத்திலிருந்து கல்வி கற்பதற்குத் தெரிந்தெடுத்துக் கொள்வதற்கும் கூட உரிமை கொண்டிருக்கலாம்.]

---

1. சட்ட எண் 30/2012 இன் 4 ஆம் பிரிவினால் (1) ஆம் உட்பிரிவிற்கு மாற்றாக (01–08–2012 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.
2. சட்ட எண் 30/2012 இன் 4 ஆம் பிரிவினால் வரம்புரையாக (01–08–2012 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.
3. மேற்படிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் (01–08–2012 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

Special provisions for children not admitted to, or who have not completed, elementary education.

4. Where a child above six years of age has not been admitted in any school or though admitted, could not complete his or her elementary education, then, he or she shall be admitted in a class appropriate to his or her age:

Provided that where a child is directly admitted in a class appropriate to his or her age, then, he or she shall, in order to be at par with others, have a right to receive special training, in such manner, and within such time-limits, as may be prescribed:

Provided further that a child so admitted to elementary education shall be entitled to free education till completion of elementary education even after fourteen years.

Right of transfer to other school.

5. (*1*) Where in a school, there is no provision for completion of elementary education, a child shall have a right to seek transfer to any other school, excluding the school specified in sub-clauses (*iii*) and (*iv*) of clause (*n*) of section 2, for completing his or her elementary education.

(*2*) Where a child is required to move from one school to another, either within a State or outside, for any reason what so ever, such child shall have a right to seek transfer to any other school, excluding the school specified in sub-clauses (*iii*) and (*iv*) of clause (*n*) of section 2, for completing his or her elementary education.

(3) For seeking admission in such other school, the Head-teacher or in-charge of the school where such child was last admitted, shall immediately issue the transfer certificate:

Provided that delay in producing transfer certificate shall not be a ground for either delaying or denying admission in such other school:

Provided further that the Head-teacher or in-charge of the school delaying issuance of transfer certificate shall be liable for disciplinary action under the service rules applicable to him or her.

**4.** ஆறு வயதிற்கு மேற்பட்ட குழந்தை ஒன்று, பள்ளி எதிலும் சேர்க்கப்படாதிருக்கிற அல்லது சேர்க்கப்பட்டிருந்து அவனுடைய அல்லது அவளுடைய தொடக்கக் கல்வியை முடிக்க முடியாதிருக்கிறவிடத்து அதன்பின்பு, அவன் அல்லது அவள், அவனுடைய அல்லது அவளுடைய வயதுக்கு உரிய வகுப்பு ஒன்றில் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்:

தொடக்கக் கல்விக்கு சேர்க்கப்பட்டிராத அல்லது முடித்திராத குழந்தைகளுக்–கான சிறப்பு வகையங்கள்.

**வரம்புரையாக:** குழந்தை ஒன்று, அவனுடைய அல்லது அவளுடைய வயதுக்கு உரிய வகுப்பு ஒன்றில் நேரடியாக சேர்க்கப்பட்டிருக்கிறவிடத்து, அதன்பின்பு, அவன் அல்லது அவள், மற்றவர்களுக்குச் சமமாக இருக்கும் பொருட்டு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும், அத்தகைய கால வரம்புகளுக்குள்ளும் சிறப்புப் பயிற்சி பெறுவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** தொடக்கக் கல்விக்கு அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட குழந்தை ஒன்று, பதினான்கு வயதிற்குப் பின்பும்கூட தொடக்கக் கல்வியினை முடிக்கும் வரையில் இலவசக் கல்விக்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

**5.** (1) பள்ளி ஒன்றில், தொடக்கக் கல்வியினை முடிப்பதற்கான வகையம் எதுவும் இல்லாதிருக்கிறவிடத்து, குழந்தை ஒன்று, அவனுடைய அல்லது அவளுடைய தொடக்கக் கல்வியை முடிப்பதற்காக, 2 ஆம் பிரிவின் (ந) கூறின் (iii) மற்றும் (iv) ஆம் உட்கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட பள்ளி நீங்கலாக, பிற பள்ளி எதற்கும் மாறுதல் கோருவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

பிற பள்ளிக்கு மாறுவதற்கு உரிமை.

(2) எதுவேயாயினதுமான காரணத்திற்காக, ஒரு மாநிலத்திற்குள்ளோ அல்லது வெளியேயோ உள்ள ஒரு பள்ளியிலிருந்து பிறிதொரு பள்ளிக்குச் செல்வதற்கு குழந்தை ஒன்று வேண்டுகிறவிடத்து, அத்தகைய குழந்தை, அவனுடைய அல்லது அவளுடைய தொடக்கக் கல்வியை முடிப்பதற்காக 2 ஆம் பிரிவின் (ந) கூறின் (iii) ஆம் மற்றும் (iv) ஆம் உட்கூறுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள பள்ளி நீங்கலாக, பிற பள்ளி எதற்கும் மாறுதல் கோருவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய பிற பள்ளியில் மாணவர் சேர்க்கையினை கோருவதற்காக, குழந்தை கடைசியாக சேர்க்கப்பட்டிருந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பொறுப்பில் உள்ளவர், பள்ளி மாற்றுச் சான்றிதழை உடனடியாக வழங்குதல் வேண்டும்:

**வரம்புரையாக:** பள்ளி மாற்றுச் சான்றிதழை முன்னிடுவதற்கான காலதாமதம், அத்தகைய பிற பள்ளியில் மாணவர் சேர்க்கையினை காலந்தாழ்த்துவதற்கோ அல்லது மறுப்பதற்கோவான காரணம் ஒன்றாக இருத்தல் ஆகாது:

**மேலும் வரம்புரையாக:** பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பொறுப்பில் உள்ளவர், பள்ளி மாற்றுச் சான்றிதழை வழங்குவதற்குத் தவறுகையில், அவருக்கு அல்லது அவளுக்கு பொருந்தத்தக்க பணி விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்.

## CHAPTER III

## DUTIES OF APPROPRIATE GOVERNMENT, LOCAL AUTHORITY AND PARENTS

Duty of appropriate Government and local authority to establish school.

6. For carrying out the provisions of this Act, the appropriate Government and the local authority shall establish, within such area or limits of neighbourhood, as may be prescribed, a school, where it is not so established, within period of three years from the commencement of this Act.

Sharing of financial and other responsibilities.

7. (1) The Central Government and the State Governments shall have concurrent responsibility for providing funds for carrying out the provisions of this Act.

(2) The Central Government shall prepare the estimates of capital and recurring expenditure for the implementation of the provisions of the Act.

(3) The Central Government shall provide to the State Governments, as grants-in-aid of revenues, such percentage of expenditure referred to in sub-section (2) as it may determine, from time to time, in consultation with the State Governments.

(4) The Central Government may make a request to the President to make a reference to the Finance Commission under sub-clause (d) of clause (3) of article 280 to examine the need for additional resources to be provided to any State Government so that the said State Government may provide its share of funds for carrying out the provisions of the Act.

(5) Notwithstanding anything contained in sub-section (4), the State Government shall, taking into consideration the sums provided by the Central Government to a State Government under sub-section (3), and its other resources, be responsible to provide funds for implementation of the provisions of the Act.

(6) The Central Government shall—

(*a*) develop a framework of national curriculum with the help of academic authority specified under section 29;

## அத்தியாயம் III

## உரிய அரசு, உள்ளாட்சி அதிகார அமைப்பு மற்றும் பெற்றோர்களின் கடமைகள்

பள்ளியை நிறுவுவதற்கு உரிய அரசு மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்பின் கடமை.

**6.** இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக, உரிய அரசு மற்றும் உள்ளாட்சி அதிகாரஅமைப்பு, சுற்றுப்புறத்திலுள்ள வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய வரையிடம் அல்லது வரம்புகளுக்குள், பள்ளி ஒன்றை, அது அவ்வாறு நிறுவப்படாமல் இருக்கிறவிடத்து, இந்தச் சட்டத்தின் தொடக்கத்திலிருந்து மூன்று ஆண்டுகள் காலஅளவுக்குள் நிறுவுதல் வேண்டும்.

நிதியியல் மற்றும் பிற பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளுதல்.

**7.** (1) மைய அரசு மற்றும் மாநில அரசுகள், இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக, நிதியங்கள் வழங்குவதற்கு ஒருங்கிணைந்த பொறுப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மைய அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்களை செயற்படுத்துவதற்காக மூலதன மற்றும் தொடர் செலவினங்களின் மதிப்பீடுகளைத் தயாரித்தல் வேண்டும்.

(3) மைய அரசு, மாநில அரசுகளுக்கு, மாநில அரசுகளுடன் அவ்வப்போது கலந்தாய்வு செய்து, அது தீர்மானிக்கலாகும் (2) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள அத்தகைய செலவினத்தின் விழுக்காட்டினை, வருவாய்களில் உதவி மானியங்களாக வழங்குதல் வேண்டும்.

(4) மைய அரசு, மாநில அரசு எதற்கும், இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக, கூறப்பட்ட மாநில அரசு அதனுடைய பங்கு நிதியங்களை வழங்கலாகும் அளவுக்கு வகை செய்யப்பட வேண்டிய கூடுதல் வளஆதாரங்களுக்கான தேவையினை ஆய்வு செய்வதற்கு 280 ஆம் உறுப்பின் (3) ஆம் கூறின் (ஈ) உட்கூறின்படி நிதி ஆணையத்திற்கு குறித்தனுப்புகை ஒன்றைச் செய்வதற்கு குடியரசுத் தலைவரைக் கேட்டுக் கொள்ளலாம்.

(5). (4) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மாநில அரசு, (3) ஆம் உட்பிரிவின்படி மாநில அரசு ஒன்றுக்கு மைய அரசால் வழங்கப்பட்ட தொகைகளை மற்றும் அதனுடைய பிற வளஆதாரங்களைக் கருத்திற்கொண்டு இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செயற்படுத்துவதற்கான நிதியங்களை வழங்குவதற்கு பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்.

(6). மைய அரசு—

(அ) 29 ஆம் பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட கல்விசார்ந்த அதிகாரஅமைப்பின் உதவியுடன் தேசிய பாடத்திட்டத்தின் வரைச்சட்டம் ஒன்றை மேம்படுத்துதல் வேண்டும்;

(b) develop and enforce standards for training of teachers;

(c) provide technical support and resources to the State Government for promoting innovations, researches, planning and capacity building.

Duties of appropriate Government.

8. The appropriate Government shall—

(a) provide free and compulsory elementary education to every child:

Provided that where a child is admitted by his or her parents or guardian, as the case may be, in a school other than a school established, owned, controlled or substantially financed by funds provided directly or indirectly by the appropriate Government or a local authority, such child or his or her parents or guardian, as the case may be, shall not be entitled to make a claim for reimbursement of expenditure incurred on elementary education of the child in such other school.

*Explanation.*— The term "compulsory education" means obligation of the appropriate Government to—

(i) provide free elementary education to every child of the age of six to fourteen years; and

(ii) ensure compulsory admission, attendance and completion of elementary education by every child of the age of six to fourteen years;

(b) ensure availability of a neighbourhood school as specified in section 6;

(ஆ) ஆசிரியர்களின் பயிற்சிக்கான தரங்களை மேம்படுத்துதலும் செயலுறுத்துதலும் வேண்டும்;

(இ) மாநில அரசுக்கு புதுமுறைகள், ஆராய்ச்சிகள், திட்டமிடுதல் மற்றும் அறிவுத்திறன் அமைத்தலை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்ப ஆதரவு மற்றும் வளஆதாரங்களுக்கு வகைசெய்தல் வேண்டும்.

8. உரிய அரசு — உரிய அரசின் கடமைகள்.

(அ) ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வி வழங்குதல் வேண்டும்:

**வரம்புரையாக:** குழந்தை ஒன்று, அவனுடைய அல்லது அவளுடைய பெற்றோரால் அல்லது நேர்வுக்கேற்ப, காப்பாளரால், உரிய அரசு அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பால் நிறுவப்பட்ட, அதற்குச் சொந்தமான, அதன் கட்டாளுகையிலுள்ள அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ வகை செய்யப்பட்ட நிதியங்கள் வாயிலாக கணிசமாக நிதியளிப்பு செய்யப்பட்ட பள்ளி ஒன்று அல்லாத பிற பள்ளி ஒன்றில் சேர்க்கப்பட்டிருக்கிறவிடத்து, நேர்வுக்கேற்ப, அத்தகைய குழந்தை அல்லது அவனுடைய அல்லது அவளுடைய பெற்றோர் அல்லது காப்பாளர், அத்தகைய பிற பள்ளியில் குழந்தையின் தொடக்கக் கல்வியின் பேரில் உள்ளான செலவினத்தை மீளப்பெறுவதற்கான கோருரிமை ஒன்றைச் செய்வதற்கு உரிமை கொண்டவர் ஆகார்.

**விளக்கம்:** ''கட்டாயக் கல்வி'' என்ற சொற்கூறு—

(i) ஆறு முதல் பதினான்கு வயது வரை உள்ள குழந்தை ஒவ்வொன்றுக்கும் இலவச தொடக்கக் கல்வி வழங்குவதற்கான; மற்றும்

(ii) ஆறு முதல் பதினான்கு வயது வரை உள்ள குழந்தை ஒவ்வொன்றினாலும், கட்டாய மாணவர் சேர்க்கை, வருகை மற்றும் தொடக்கக் கல்வியை முடித்தலை உறுதி செய்வதற்கான

உரிய அரசின் கடமைப் பொறுப்பு என்று பொருள்படும்;

(ஆ) 6 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டிருக்கிற சுற்றுப்புறத்திலுள்ள பள்ளி ஒன்று கிடைத்தலை உறுதி செய்தல் வேண்டும்;

(c) ensure that the child belonging to weaker section and the child belonging to disadvantaged group are not discriminated against and prevented from pursuing and completing elementary education on any grounds;

(d) provide infrastructure including school building, teaching staff and learning equipment;

(e) provide special training facility specified in section 4;

(f) ensure and monitor admission, attendance and completion of elementary education by every child;

(g) ensure good quality elementary education conforming to the standards and norms specified in the Schedule;

(h) ensure timely prescribing of curriculum and courses of study for elementary education; and

(i) provide training facility for teachers.

Duties of local authority.

**9.** Every local authority shall—

(*a*) provide free and compulsory elementary education to every child:

(இ) நலிவுற்ற பிரிவைச்சார்ந்த குழந்தை மற்றும் வசதியற்ற தொகுதியைச் சார்ந்த குழந்தை, எந்தக் காரணத்தின் பேரிலும் எதிராக வேறுபாடு காட்டப்படவில்லை மற்றும் தொடக்கக் கல்வியினைத் தொடர்வதிலிருந்து மற்றும் முடிப்பதிலிருந்து தடுக்கப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

(ஈ) பள்ளிக் கட்டடம், ஆசிரியப் பணியாளர் தொகுதி மற்றும் கற்றுக் கொள்வதற்கான சாதனம் உள்ளடங்கலாக உள்கட்டமைப்பினை வழங்குதல் வேண்டும்;

(உ) 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள சிறப்புப் பயிற்சி வசதியினை வழங்குதல் வேண்டும்;

(ஊ) குழந்தை ஒவ்வொன்றினாலும், மாணவர் சேர்க்கை, வருகை மற்றும் தொடக்கக்கல்வியினை முடித்தலை உறுதி செய்தல் மற்றும் கண்காணித்தல் வேண்டும்;

(எ) இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தரங்கள் மற்றும் நெறிமுறைகளுக்கு இணங்கியவாறு நல்ல தரமான தொடக்கக்கல்வியினை உறுதி செய்தல் வேண்டும்;

(ஏ) தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டம் மற்றும் படிப்புப் பிரிவுகளை காலத்திற்குப் பொருத்தமாக வகுத்துரைத்தலை உறுதி செய்தல் வேண்டும்; மற்றும்

(ஐ) ஆசிரியர்களுக்கு பயிற்சி வசதியினை வழங்குதல் வேண்டும்.

**9.** உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும் – உள்ளாட்சி அதிகார அமைப்பின் கடமைகள்.

(அ) ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச மற்றும் கட்டாயத் தொடக்கக் கல்வி வழங்குதல் வேண்டும்:

Provided that where a child is admitted by his or her parents or guardian, as the case may be, in a directly or indirectly by the appropriate Government or a local authority, such child or his or her parents or guardian, as the case may be, shall not be entitled to make a claim for reimbursement of expenditure incurred on elementary education of the child in such other school;

(b) ensure availability of a neighbourhood school as specified in section 6;

(c) ensure that the child belonging to weaker section and the child belonging to disadvantaged group are not discriminated against and prevented from pursuing and completing elementary education on any grounds;

(d) maintain records of children up to the age of fourteen years residing within its jurisdiction, in such manner as may be prescribed;

(e) ensure and monitor admission, attendance and completion of elementary education by every child residing within its jurisdiction;

(f) provide infrastructure including school building, teaching staff and learning material;

(g) provide special training facility specified in section 4;

(h) ensure good quality elementary education conforming to the standards and norms specified in the Schedule;

**வரம்புரையாக:** குழந்தை ஒன்று அவனுடைய அல்லது அவளுடைய பெற்றோரால் அல்லது, நேர்வுக்கேற்ப, காப்பாளரால், உரிய அரசு அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பால் நிறுவப்பட்ட, அதற்குச் சொந்தமான, அதன் காட்டாளுகையிலுள்ள அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ வகை செய்யப்பட்ட நிதியங்கள் வாயிலாக கணிசமாக நிதியளிப்பு செய்யப்பட்ட பள்ளி அல்லாத பிற பள்ளி ஒன்றில் சேர்க்கப்பட்டிருக்கிறவிடத்து, நேர்வுக்கேற்ப, அத்தகைய குழந்தை அல்லது அவனுடைய அல்லது அவளுடைய பெற்றோர் அல்லது காப்பாளர், அத்தகைய பிற பள்ளியில் குழந்தையின் தொடக்கக் கல்வியின் பேரில் உள்ளான செலவினத்தை மீளப் பெறுவதற்கான கோரிக்கை ஒன்றைச் செய்வதற்கு உரிமை கொண்டவர் ஆகார்.

(ஆ) 6 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டிருக்கிற சுற்றுப்புறத்திலுள்ள பள்ளி ஒன்று கிடைத்தலை உறுதி செய்தல் வேண்டும்;

(இ) நலிவுற்ற பிரிவைச்சார்ந்த குழந்தை மற்றும் வசதியற்ற தொகுதியைச் சார்ந்த குழந்தை, எந்தக் காரணத்தின் பேரிலும் எதிராக வேறுபாடு காட்டப்படவில்லை மற்றும் தொடக்கக் கல்வியினைத் தொடர்வதிலிருந்து மற்றும் முடிப்பதிலிருந்து தடுக்கப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

(ஈ) அதனுடைய அதிகாரவரம்புக்குள் குடியிருக்கும், பதினான்கு வயது வரையுள்ள குழந்தைகளின் பதிவணங்களை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் பேணிவருதல் வேண்டும்;

(உ) அதனுடைய அதிகாரவரம்புக்குள் குடியிருக்கும், குழந்தை ஒவ்வொன்றினாலும் மாணவர் சேர்க்கை, வருகை மற்றும் தொடக்க கல்வியினை முடித்தலை உறுதி செய்தல் மற்றும் கண்காணித்தல் வேண்டும்;

(ஊ) பள்ளிக் கட்டிடம், ஆசிரியப் பணியாளர் தொகுதி மற்றும் கற்றுக் கொள்வதற்கான பொருட்கள் உள்ளடங்கலாக கட்டமைப்பினை வழங்குதல் வேண்டும்;

(எ) 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள சிறப்புப் பயிற்சி வசதியினை வழங்குதல் வேண்டும்;

(ஏ) இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தரங்கள் மற்றும் நெறிமுறைகளுக்கு இணங்கியவாறு நல்ல தரமான தொடக்கக் கல்வியினை உறுதி செய்தல் வேண்டும்;

(i) ensure timely prescribing of curriculum and courses of study for elementary education;

(j) provide training facility for teachers;

(k) ensure admission of children of migrant families;

(l) monitor functioning of schools within its jurisdiction; and

(m) decide the academic calendar.

Duty of parents and guardian.

10. It shall be the duty of every parent or guardian to a dmit or cause to be admitted his or her child or ward, as the case may be, to an elementary education in the neighbourhood school.

Appropriate Government to provide for pre-school education.

11**.** With a view to prepare children above the age of three years for elementary education and to provide early childhood care and education for all children until they complete the age of six years, the appropriate Government may make necessary arrangement for providing free pre-school education for such children.

## CHAPTER IV

## RESPONSIBILITIES OF SCHOOLS AND TEACHERS

Extent of school's responsibility for free and compulsory

12**.** **(**1) For the purposes of this Act, a school,—

(a) specified in sub-clause (i) of clause (n) of section 2 shall provide free and compulsory elementary education to all children admitted therein;

(ஐ) தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டம் மற்றும் படிப்புப் பிரிவுகளை காலத்திற்குப் பொருத்தமாக வகுத்துரைத்தலை உறுதி செய்தல் வேண்டும்;

(ஒ) ஆசிரியர்களுக்கு பயிற்சி வசதியினை வழங்குதல் வேண்டும்;

(ஓ) புலம் பெயர்கிற குடும்பங்களின் குழந்தைகளின் மாணவர் சேர்க்கையினை உறுதி செய்தல் வேண்டும்;

(ஔ) அதனுடைய அதிகாரவரம்பிற்குள் உள்ள பள்ளிகளின் செயற்பாட்டினை கண்காணித்தல் வேண்டும்; மற்றும்

(க) கல்வியாண்டு நாட்காட்டியினை முடிவு செய்தல் வேண்டும்.

பெற்றோர் மற்றும் காப்பாளரின் கடமை.

**10.** பெற்றோர் அல்லது காப்பாளர், அவருடைய அல்லது அவளுடைய குழந்தை அல்லது, நேர்வுக்கேற்ப, காப்பில் உள்ளவரை சுற்றுப்புறத்திலுள்ள பள்ளி ஒன்றில் தொடக்கக் கல்வி பெறுவதற்காக சேர்த்தல் அல்லது சேர்க்கப்படுமாறு செய்வித்தல் அவர்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

உரிய அரசு, மழலையர் பள்ளிக் கல்விக்கு வகை செய்தல்.

**11.** தொடக்கக் கல்விக்காக மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை தயார்படுத்தும் பொருட்டு மற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் அவர்கள் ஆறு வயதினை முடிக்கும் வரையில் குழந்தைப் பருவ முற்பகுதி சார்ந்த கவனிப்பு மற்றும் கல்விக்கு வகை செய்வதற்கு, உரிய அரசு, அத்தகைய குழந்தைகளுக்கு இலவச மழலையர் பள்ளிக் கல்வி வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

## அத்தியாயம் IV

## பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்புகள்

இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்குவதற்கு பள்ளி–களுக்குள்ள பொறுப்பின் அளாவுகை.

**12.** (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக,—

(அ) 2 ஆம் பிரிவின் (ங) கூறின் (i) உட்கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள பள்ளி ஒன்று, அதில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகள் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயத் தொடக்கக் கல்வி வழங்குதல் வேண்டும்;

(b) specified in sub-clause (ii) of clause (n) of section 2 shall provide free and compulsory elementary education to such proportion of children admitted therein as its annual recurring aid or grants so received bears to its annual recurring expenses, subject to a minimum of twenty-five percent.;

(c) specified in sub-clauses (iii) and (iv) of clause (n) of section 2 shall admit in class I, to the extent of at least twenty-five per cent. of the strength of that class, children belonging to weaker section and disadvantaged group in the neighbourhood and provide free and compulsory elementary education till its completion:

Provided further that where a school specified in clause (*n*) of section 2 imparts pre-school education, the provisions of clauses (*a*) to (*c*) shall apply for admission to such pre-school education.

(*2*) The school specified in sub-clause (*iv*) of clause (*n*) of section 2 providing free and compulsory elementary education as specified in clause (*c*) of sub-section (*1*) shall be reimbursed expenditure so incurred by it to the extent of per-child-expenditure incurred by the State, or the actual amount charged from the child, whichever is less, in such manner as may be prescribed:

Provided that such reimbursement shall not exceed per-child-expenditure incurred by a school specified in sub-clause (i) of clause (n) of section 2:

(ஆ) 2 ஆம் பிரிவின் (ந) கூறின் (ii) உட்கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள பள்ளி ஒன்று, இருபத்தைந்து விழுக்காடு குறைந்த அளவு ஒன்றிற்கு உட்பட்டு, அவ்வாறு பெறப்பட்ட அதனுடைய ஆண்டு தொடர் உதவி அல்லது மானியங்கள், அதனுடைய ஆண்டு தொடர் செலவினங்களைக் கொண்டிருக்கிறவிடத்து, அதில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளின் அத்தகைய வீதப்படி இலவச மற்றும் கட்டாயத் தொடக்கக் கல்வி வழங்குதல் வேண்டும்;

(இ) 2 ஆம் பிரிவின் (ந) கூறின் (iii) மற்றும் (iv) உட்கூறுகளின் குறித்துரைக்கப்பட்டுள்ள பள்ளி ஒன்று, சுற்றுப்புறத்திலுள்ள நலிவுற்ற பிரிவைச் சார்ந்த மற்றும் வசதியற்ற தொகுதியைச் சார்ந்த குழந்தைகளை முதல் வகுப்பில், அந்த வகுப்பின் அளவில் குறைந்தது இருபத்தைந்து விழுக்காடு அளவிற்கு சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும் மற்றும் அதனுடைய முடிவு வரையில் இலவச மற்றும் கட்டாயத் தொடக்கக்கல்வி வழங்குதல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** 2 ஆம் பிரிவின் (ந) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள பள்ளி ஒன்று, மழலையர் பள்ளி கல்வி கற்பிக்கிறவிடத்து, (அ) முதல் (இ) முடியவுள்ள கூறுகளின் வகையங்கள், அத்தகைய மழலையர்பள்ளி கல்விக்கான மாணவர் சேர்க்கைக்குப் பொருந்துதல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின் (இ) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இலவச மற்றும் கட்டாயத் தொடக்கக் கல்வி வழங்கும், 2 ஆம் பிரிவின் (ந) கூறில் (iv) உட்கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள பள்ளி, அதனால் அவ்வாறு செலவு செய்யப்பட்ட செலவினங்களை, அரசால் ஒரு குழந்தைக்கு செய்யப்பட்ட செலவினம் அளவுக்கு அல்லது குழந்தையிடமிருந்து உண்மையிலேயே விதிக்கப்பட்ட தொகை இவற்றில் எது குறைவானதோ அதை, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மீளப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** அத்தகைய மீளப் பெறுதல், 2 ஆம் பிரிவின் (ந) கூறின் (i) உட்கூறில் குறித்துரைக்கப்பட்ட பள்ளி ஒன்றினால், குழந்தை ஒன்றுக்கு உள்ளாகும் செலவினத்திற்கு மிகையாதல் ஆகாது:

Provided further that where such school is already under obligation to provide free education to a specified number of children on account of it having received any land, building, equipment or other facilities, either free of cost or at a concessional rate, such school shall not be entitled for reimbursement to the extent of such obligation.

(3) Every school shall provide such information as may be required by the appropriate Government or the local authority, as the case may be.

No capitation fee and screening procedure for admission.

13. (1) No school or person shall, while admitting a child, collect any capitation fee and subject the child or his or her parents or guardian to any screening procedure.

(2) Any school or person, if in contravention of the provisions of sub-section (1),—

(*a*) receives capitation fee, shall be punishable with fine which may extend to ten times the capitation fee charged;

(b) subjects a child to screening procedure, shall be punishable with fine which may extend to twenty-five thousand rupees for the first contravention and fifty thousand rupees for each subsequent contraventions.

Proof of age for admission.

14. (*1*) For the purposes of admission to elementary education, the age of a child shall be determined on the basis of the birth certificate issued in accordance with the provisions of the Births, Deaths and Marriages Registration Act, 1886 or on the basis of such other document, as may be prescribed. 6 /1886.

(2) No child shall be denied admission in a school for lack of age proof.

No denial of admission.

15. A child shall be admitted in a school at the commencement of the academic year or within such extended period as may be prescribed:

**மேலும் வரம்புரையாக:** அத்தகைய பள்ளி, இலவசமாகவோ, சலுகை விலையிலோ நிலம், கட்டிடம், சாதனம் அல்லது பிற வசதிகள் எவற்றையும் பெற்றுள்ள காரணத்தின் பேரில் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையிலான குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்குவதற்கான கடப்பாட்டினை ஏற்கெனவே கொண்டிருக்கிறவிடத்து, அத்தகைய பள்ளி, அத்தகைய கடப்பாட்டின் அளவிற்கு மீளப்பெறுவதற்கான உரிமையினை கொண்டிருத்தல் ஆகாது.

(3) பள்ளி ஒவ்வொன்றும், உரிய அரசால் அல்லது, நேர்வுக்கேற்ப, உள்ளாட்சி அதிகாரஅமைப்பால் வேண்டுறுத்தப்படலாகும் அத்தகைய தகவலினை வழங்குதல் வேண்டும்.

மாணவர் சேர்க்கையின்—போது நுழைவு நன்கொடை மற்றும் கழிப்பு நெறிமுறை எதுவும் இருத்தல் ஆகாது.

**13.** (1) பள்ளி எதுவும் அல்லது நபர் எவரும், குழந்தை ஒன்றை சேர்க்கையில், நுழைவு நன்கொடை எதனையும் வசூலித்தல் ஆகாது மற்றும் குழந்தை அல்லது அவனுடைய அல்லது அவளுடைய பெற்றோர் அல்லது காப்பாளர் கழிப்பு நெறிமுறை எதற்கும் உட்படுத்தப்படுதல் ஆகாது.

(2) பள்ளி எதுவும் அல்லது நபர் எவரும், (1) ஆம் உட்பிரிவின் வகையங்களின் மீறுகையாக,—

(அ) நுழைவு நன்கொடை பெறுவாராயின், வசூலிக்கப்பட்ட நுழைவு நன்கொடைக்கு பத்து மடங்கு அளவுக்கு நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) குழந்தை ஒன்றைக் கழிப்பு நெறிமுறைக்கு உட்படுத்துவாராயின், முதல் மீறுகைக்காக இருபத்தையாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டமும், பிந்தைய மீறுகை ஒவ்வொன்றுக்கும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மாணவர் சேர்க்கைக்கான வயதுச் சான்று.

**14.** (1) தொடக்கக் கல்வியில் சேர்க்கும் நோக்கங்களுக்காக, குழந்தை ஒன்றின் வயது, 1886 ஆம் ஆண்டு பிறப்புகள், இறப்புகள் மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டத்தின் வகையங்களுக்கு இணங்க வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழின் ஆதாரத்தின் பேரில் அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற ஆவணத்தின் ஆதாரத்தின் பேரில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

6/1886.

(2) குழந்தை எதுவும், வயது சான்று இல்லை என்பதற்காக பள்ளி ஒன்றில் சேர்ப்பதற்கு மறுக்கப்படுதல் ஆகாது.

மாணவர் சேர்க்கை மறுக்கப்படுதல் ஆகாது.

**15.** குழந்தை ஒன்று, பள்ளி ஒன்றில், கல்வி ஆண்டின் தொடக்கத்தில் அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நீட்டிக்கப்பட்ட காலஅளவுக்குள் சேர்க்கப்படுதல் வேண்டும்:

Provided that no child shall be denied admission if such admission is sought subsequent to the extended period:

Provided further that any child admitted after the extended period shall complete his studies in such manner as may be prescribed by the appropriate Government.

[1][Examination and holding back in certain cases.]

[1][16. (1) There shall be a regular examination in the fifth class and in the eighth class at the end of every academic year.

(2) If a child fails in the examination referred to in sub-section (1), he shall be given additional instruction and granted opportunity for re-examination within a period of two months from the date of declaration of the result.

(3) The appropriate Government may allow schools to hold back a child in the fifth class or in the eighth class or in both classes, in such manner and subject to such conditions as may be prescribed, if he fails in the re-examination referred to in sub-section (2):

Provided that the appropriate Government may decide not to hold back a child in any class till the completion of elementary education.

(4) No child shall be expelled from a school till the completion of elementary education.]

Prohibition of physical punishment and mental harassment to child.

17. (1) No child shall be subjected to physical punishment or mental harassment.

(2) Whoever contravenes the provisions of sub-section (1) shall be liable to disciplinary action under the service rules applicable to such person.

No School to be established without obtaining certificate of recognition.

18. (1) No school, other than a school established, owned or controlled by the appropriate Government or the local authority, shall, after the commencement of this Act, be established or function, without obtaining a certificate of recognition from such authority, by making an application in such form and manner, as may be prescribed.

1. Subs. by Act 1 of 2019, s.2 (w.e.f. 01-03-2019).

**வரம்புரையாக:** குழந்தை எதுவும், அத்தகைய மாணவர் சேர்க்கை, நீட்டிக்கப்பட்ட காலஅளவுக்குப் பின்பு கோரப்படுமாயின், மாணவர் சேர்க்கை மறுக்கப்படுதல் ஆகாது:

**மேலும் வரம்புரையாக:** நீட்டிக்கப்பட்ட காலஅளவுக்குப் பின்பு சேர்த்துக்கொள்ளப்பட்ட குழந்தை எதுவும், உரிய அரசால், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அவனுடைய படிப்பினை முடித்தல் வேண்டும்.

[1][**16. (1)** ஒவ்வொரு கல்வியாண்டின் முடிவிலும் ஐந்தாம் வகுப்பிலும் எட்டாம் வகுப்பிலும் ஒரு வழக்கமுறையான தேர்வு இருத்தல் வேண்டும்.

[1][தேர்வம் குறித்தசில நேர்வுகளில் நிறுத்திவைத்துக் கொள்ளுதலும்.]

**(2).** **(1)** ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட தேர்வில் ஒரு குழந்தை தோல்வியடையுமாயின், அவன் கூடுதலாக போதனை அளிக்கப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் காலஅளவு ஒன்றுக்குள் மறுதேர்வுக்கு வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

**(3).** **(2)** ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட மறுதேர்வில் ஒரு குழந்தை தோல்வியடைவானாயின், உரிய அரசு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, அவனை ஐந்தாம் வகுப்பிலோ அல்லது எட்டாம் வகுப்பிலோ அல்லது இரு வகுப்புகளிலுமோ நிறுத்திவைப்பதற்கு பள்ளிகளை அனுமதிக்கலாம்:

**வரம்புரையாக:** ஒரு குழந்தை, தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் எந்தவொரு வகுப்பிலும் நிறுத்தி வைக்கப்பட வேண்டாம் என உரிய அரசு முடிவு செய்யலாம்.

**(4)** எந்த ஒரு குழந்தையும் தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் ஒரு பள்ளியிலிருந்து வெளியேற்றப்படுதல் ஆகாது.]

**17. (1)** குழந்தை எதுவும், உடலியல் தண்டனை அல்லது மனவியல் தீங்கு எதற்கும் உட்படுத்தப்படுதல் ஆகாது.

குழந்தைக்கு உடலியல் தண்டனை மற்றும் மனவியல் தீங்கிற்குத் தடை.

**(2).** **(1)** ஆம் உட்பிரிவின் வகையங்களை மீறுகிற எவரொருவரும், அத்தகைய நபருக்குப் பொருந்தத்தக்க பணி விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்.

**18. (1)** உரிய அரசால் அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பால் நிறுவப்பட்ட அல்லது அதற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டாளுகையிலுள்ள பள்ளி ஒன்று அல்லாத பிற பள்ளி எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்பு, வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும் முறையிலும் விண்ணப்பம் ஒன்றைச் செய்வதன் மூலமாக, அத்தகைய அதிகாரஅமைப்பிடமிருந்து அங்கீகாரச் சான்றிதழ் ஒன்று பெறப்படாமல், நிறுவப்படுதலோ, செயற்படுதலோ ஆகாது.

அங்கீகாரச் சான்றிதழ் பெறப்படாமல் பள்ளி எதுவும் நிறுவப்படுதல் ஆகாது.

---

1. சட்ட எண் 1/2019 இன் 2 ஆம் பிரிவினால் மாற்றாக (01–03–2019 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(2) The authority prescribed under sub-section (1) shall issue the certificate of recognition in such form, within such period, in such manner, and subject to such conditions, as may be prescribed:

Provided that no such recognition shall be granted to a school unless it fulfils norms and standards specified under section 19.

(3) On the contravention of the conditions of recognition, the prescribed authority shall, by an order in writing, withdraw recognition:

Provided that such order shall contain a direction as to which of the neighbourhood school, the children studying in the derecognised school, shall be admitted:

Provided further that no recognition shall be so withdrawn without giving an opportunity of being heard to such school, in such manner, as may be prescribed.

(*4*) With effect from the date of withdrawal of the recognition under sub-section (*3*), no such school shall continue to function.

(*5*) Any person who establishes or runs a school without obtaining certificate of recognition, or continues to run a school after withdrawal of recognition, shall be liable to fine which may extend to one lakh rupees and in case of continuing contraventions, to a fine of ten thousand rupees for each day during which such contravention continues.

Norms and standards for school.

19. (1) No school shall be established, or recognised under section 18, unless it fulfils the norms and standards specified in the Schedule.

(*2*) Where a school established before the commencement of this Act does not fulfil the norms and standards specified in the Schedule, it shall take steps to fulfil such norms and standards at its own expenses, within a period of three years from the date of such commencement.

2. (1) ஆம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும், அத்தகைய கால அளவுக்குள்ளும், அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும் அங்கீகாரச் சான்றிதழை வழங்குதல் வேண்டும்:

**வரம்புரையாக:** அத்தகைய அங்கீகாரம் எதுவும், 19 ஆம் பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட நெறிமுறைகள் மற்றும் தரங்களை நிறைவு செய்திருந்தலான்றி பள்ளி ஒன்றிற்கு வழங்கப்படுதல் ஆகாது.

(3) அங்கீகார வரைக்கட்டுகளின் மீறுகையின் பேரில், வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு, எழுத்து வடிவிலான ஆணை ஒன்றின் வாயிலாக, அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை, அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்ட பள்ளியில் படித்துவரும் குழந்தைகள் எந்தச் சுற்றுப்புறத்திலுள்ள பள்ளியில் சேர்க்கப்படுதல் வேண்டுமோ அந்தச் சுற்றுப்புறத்திலுள்ள பள்ளி குறித்த பணிப்புரை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** அங்கீகாரம் எதுவும், அத்தகைய பள்ளிக்கு, கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வழங்கப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு திரும்பப் பெறப்படுதல் ஆகாது.

(4). (3) ஆம் உட்பிரிவின்படி, அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்ட தேதி முதற்கொண்டு, அத்தகைய பள்ளி எதுவும் தொடர்ந்து செயற்படுதல் ஆகாது.

(5) அங்கீகாரச் சான்றிதழைப் பெறாமல் பள்ளி ஒன்றை நிறுவுகிற அல்லது நடத்துகிற அல்லது அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்ட பின்பு, பள்ளி ஒன்றைத் தொடர்ந்து நடத்துகிற நபர் எவரும், ஒரு லட்சம் ரூபாய்வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதிக்கப்படுவதற்கும், மீறுகை தொடர்கிற நேர்வில், அத்தகைய மீறுகை தொடர்கிற ஒவ்வொரு நாளுக்கும் பத்தாயிரம் ரூபாய் பணத்தண்டம் விதிக்கப்படுவதற்கும் உள்ளதால் வேண்டும்.

பள்ளிக்கான நெறிமுறைகள் மற்றும் தரங்கள்.

19. (1) பள்ளி எதுவும், இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கபட்ட நெறிமுறைகள் மற்றும் தரங்களை நிறைவு செய்திருந்தாலன்றி, 18 ஆம் பிரிவின்படி நிறுவப்படுதலோ, அங்கீகரிக்கப்படுதலோ ஆகாது.

(2) பள்ளி ஒன்று, இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு நிறுவப்பட்டிருந்து, இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட நெறிமுறைகள் மற்றும் தரங்களை நிறைவு செய்யாதிருக்கிறவிடத்து, அது, அத்தகைய நெறிமுறைகளையும், தரங்களையும் அதனுடைய சொந்தச் செலவில், அத்தகைய தொடக்கத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் காலஅளவு ஒன்றுக்குள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

(3) Where a school fails to fulfil the norms and standards within the period specified under sub-section (2), the authority prescribed under sub-section (1) of section 18 shall withdraw recognition granted to such school in the manner specified under sub-section (3) thereof.

(4) With effect from the date of withdrawal of recognition under sub-section (3), no school shall continue to function.

(5) Any person who continues to run a school after the recognition is withdrawn, shall be liable to fine which may extend to one lakh rupees and in case of continuing contraventions, to a fine of ten thousand rupees for each day during which such contravention continues.

Power to amend Schedule.

20. The Central Government may, by notification, amend the Schedule by adding to, or omitting there from, any norms and standards.

School Management Committee.

21. (1) A school, other than a school specified in sub-clause (iv) of clause (n) of section 2, shall constitute a School Management Committee consisting of the elected representatives of the local authority, parents or guardians of children admitted in such school and teachers:

Provided that atleast three-fourth of members of such Committee shall be parents or guardians:

Provided further that proportionate representation shall be given to the parents or guardians of children belonging to disadvantaged group and weaker section:

Provided also that fifty percent of Members of such Committee shall be women.

(*2*) The School Management Committee shall perform the following functions, namely:—

(*a*) monitor the working of the school;

(b) prepare and recommend school development plan;

**(3)** பள்ளி ஒன்று, **(2)** ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட காலஅளவுக்குள் நெறிமுறைகளையும் தரங்களையும் நிறைவு செய்வதற்குத் தவறுகிறவிடத்து, **18** ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு, அதனின் **(3)** ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில், அத்தகைய பள்ளிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தினை திரும்பப் பெறுதல் வேண்டும்.

**(4). (3)** ஆம் உட்பிரிவின்படி, அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்ட தேதி முதற்கொண்டு பள்ளி எதுவும் தொடர்ந்து செயற்படுதல் ஆகாது.

**(5)** அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்ட பின்பும் பள்ளி ஒன்றைத் தொடர்ந்து நடத்திவருகிற நபர் எவரும், ஒரு லட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும், பணத்தண்டம் விதிக்கப்படுவதற்கும், மீறுகை தொடர்கிற நேர்வில், அத்தகைய மீறுகை தொடர்கிற ஒவ்வொரு நாளுக்கும் பத்தாயிரம் ரூபாய் பணத்தண்டம் ஒன்று விதிக்கப்படுவதற்கும் உள்ளாதல் வேண்டும்.

இணைப்புப்– பட்டியலைத் திருத்துவதற்கு அதிகாரம்.

**20.** மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, இணைப்புப்பட்டியலை, நெறிமுறைகள் மற்றும் தரங்கள் எவற்றையும் சேர்ப்பதன் வாயிலாக அல்லது அதிலிருந்து விட்டுவிடுவதன் வாயிலாக திருத்தம் செய்யலாம்.

பள்ளி மேலாண்மைக் குழு.

**21. (1). 2** ஆம் பிரிவின் (ந) கூறின் (iv) உட்கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள பள்ளி அல்லாத பிற பள்ளி ஒன்று, உள்ளாட்சி அதிகாரஅமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாற்றுநர்கள், அத்தகைய பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் அல்லது காப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களை உள்ளடக்கிய பள்ளி மேலாண்மைக்குழு ஒன்றை அமைத்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** அத்தகைய குழுவின் உறுப்பினர்களில் குறைந்தது நான்கில் மூன்று பங்கினராவது பெற்றோர் அல்லது காப்பாளராக இருத்தல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** வசதியற்ற தொகுதியைச் சார்ந்த மற்றும் நலிவுற்ற பிரிவைச் சார்ந்த குழந்தைகளின் பெற்றோர் அல்லது காப்பாளர்களுக்கு விகிதாச்சார சார்பாற்றம் வழங்கப்படுதல் வேண்டும்:

**இன்னும் வரம்புரையாக:** அத்தகைய குழுவின் உறுப்பினர்களில் ஐம்பது விழுக்காடு பெண்களாக இருத்தல் வேண்டும்.

**(2)** பள்ளி மேலாண்மைக் குழு, பின்வரும் செயற்பணிகளைப் புரிதல் வேண்டும், அவையாவன:—

(அ) பள்ளி வேலை செய்தலைக் கண்காணித்தல்;

(ஆ) பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயாரித்தல் மற்றும் பரிந்துரை செய்தல்;

(c) monitor the utilisation of the grants received from the appropriate Government or local authority or any other source; and

(d) perform such other functions as may be prescribed:

[1][Provided that the School Management Committee constituted under sub-section (*1*) in respect of,—

(a) a school established and administered by minority whether based on religion or language; and

(b) all other aided schools as defined in sub-section (ii) of clause (n) of section 2,

shall perform advisory function only.]

School Development Plan.

22. (1) Every [2][School Management Committee, except the School Management Committee in respect of a school established and administered by minority, whether based on religion or language and an aided school as defined in sub-clause (*ii*) of clause (*n*) of section 2, constituted] under sub-section (*1*) of section 21, shall prepare a School Development Plan, in such manner as may be prescribed.

(2) The School Development Plan so prepared under sub-section (1) shall be the basis for the plans and grants to be made by the appropriate Government or local authority, as the case may be.

Qualifications for appointment and terms and conditions of service of teachers.

23. (1) Any person possessing such minimum qualifications, as laid down by an academic authority, authorised by the Central Government, by notification, shall be eligible for appointment as a teacher.

---

1. Ins. by Act 30 of 2012, s. 5 (w.e.f. 1-8-2012).
2. Subs. by s.6, *ibid.,* for "School Management Committee, constituted" (w.e.f. 1-8-2012).

(இ) உரிய அரசு அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பு அல்லது பிற ஆதாரம் எதனிடமிருந்தும் பெறப்பட்ட மானியங்கள் பயன்படுத்தப்படுதலை கண்காணித்தல்; மற்றும்

(ஈ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளைப் புரிதல்.

[1][**வரம்புரையாக:**

(அ) சமய அடிப்படையிலோ அல்லது மொழி அடிப்படையிலோவான சிறுபான்மையினரால் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படும் ஒரு பள்ளி; மற்றும்

(ஆ) 2 ஆம் பிரிவின், (ங) கூறின் (ii) ஆம் உட்பிரிவில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ள பிற உதவிபெறும் பள்ளிகள் அனைத்தையும் பொறுத்து

(1) ஆம் உட்பிரிவின்படி அமைக்கப்பட்ட பள்ளி மேலாண்மைக்குழுவானது ஆலோசனை வழங்கும் பணியை மட்டுமே செய்தல் வேண்டும்.]

**22. (1).** 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின்படி [2][அமைக்கப்பட்ட, சமய அடிப்படையிலோ அல்லது மொழி அடிப்படையிலோவான, சிறுபான்மையினரால் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் ஒரு பள்ளியையும் மற்றும் 2 ஆம் பிரிவின் (ங) கூறின் (ii) ஆம் உட்கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள ஓர் உதவிபெறும் பள்ளியையும் பொறுத்த பள்ளி மேலாண்மைக் குழு தவிர பள்ளி மேலாண்மைக் குழு] வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் பள்ளி வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். பள்ளி வளர்ச்சித் திட்டம்.

**(2).** (1) ஆம் உட்பிரிவின்படி அவ்வாறு தயாரிக்கப்பட்ட பள்ளி வளர்ச்சித் திட்டம், உரிய அரசால் அல்லது, நேர்வுக்கேற்ப, உள்ளாட்சி அதிகாரஅமைப்பால் செய்யப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் மானியங்களுக்கு அடிப்படையாகும்.

**23. (1)** மைய அரசால், அறிவிக்கை வாயிலாக அதிகாரமளிக்கப்பட்ட கல்வி அதிகாரஅமைப்பு ஒன்றினால், விதிக்கப்பட்டுள்ள அத்தகைய குறைந்த அளவு கல்வித்தகுதிகளைக் கொண்டுள்ள நபர் எவரும், ஆசிரியர் ஒருவராகப் பணியமர்த்தம் செய்யப்படுவதற்குத் தகுமையுடையவர் ஆவார். ஆசிரியர்களின் பணியமர்த்தத்–திற்கான கல்வித்தகுதிகள், பணி வரையுரைகளும், வரைகட்டுக்களும்.

1. சட்ட எண் 30/2012 இன் 5 ஆம் பிரிவினால் (01–08–2012 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.
2. மேற்படிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் "அமைத்துருவாக்கப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழு" என்பதற்கு மாற்றாக (01–08–2012 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(2) Where a State does not have adequate institutions offering courses or training in teacher education, or teachers possessing minimum qualifications as laid down under sub-section (1) are not available in sufficient numbers, the Central Government may, if it deems necessary, by notification, relax the minimum qualifications required for appointment as a teacher, for such period, not exceeding five years, as may be specified in that notification:

Provided that a teacher who, at the commencement of this Act, does not possess minimum qualifications as laid down under sub-section (1), shall acquire such minimum qualifications within a period of five years:

[1][Provided further that every teacher appointed or in position as on the 31st March, 2015, who does not possess minimum qualifications as laid down under sub-section (1), shall acquire such minimum qualifications within a period of four years from the date of commencement of the Right of Children to Free and Compulsory Education (Amendment) Act, 2017.] 24 /2017.

(3) The salary and allowances payable to, and the terms and conditions of service of, teachers shall be such as may be prescribed.

Duties of teachers and redressal of grievances.

24. (1) A teacher appointed under sub-section (*1*) of section 23 shall perform the following duties, namely:—

(a) maintain regularity and punctuality in attending school;

(b) conduct and complete the curriculum in accordance with the provisions of sub-section (2) of section 29;

(c) complete entire curriculum within the specified time;

1. Ins. by Act 24 of 2017, s. 2 (w.e.f. 1-4-2015).

**(2)** மாநிலம் ஒன்று, ஆசிரியர் கல்வியில் படிப்புப் பிரிவுகள் அல்லது பயிற்சியினை வழங்குவதற்குப் போதிய நிறுவனங்களைக் கொண்டிராதவிடத்து, அல்லது **(1)** ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்பட்டுள்ள குறைந்தஅளவு கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ள ஆசிரியர்கள் போதிய எண்ணிக்கையில் கிடைக்காதிருக்கிறவிடத்து, மைய அரசு, தேவையெனக் கருதுமாயின், அறிவிக்கை வாயிலாக, ஆசிரியர் ஒருவராக பணியமர்த்தம் செய்யப்படுவதற்கு வேண்டுறுத்தப்பட்ட குறைந்த அளவு கல்வித்தகுதிகளை, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும், ஐந்து ஆண்டுகளுக்கு மிகையாகாத, அத்தகைய கால அளவிற்குத் தளர்த்தலாம்:

**வரம்புரையாக:** எந்த ஆசிரியர், இந்தச் சட்டத்தின் தொடக்கத்தின் போது, **(1)** ஆம் உட்பிரிவில் விதிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு கல்வித்தகுதிகளைக் கொண்டிருக்கவில்லையோ அந்த ஆசிரியர் ஒருவர், ஐந்து ஆண்டுகள் கால அளவு ஒன்றுக்குள், அத்தகைய குறைந்தஅளவு கல்வித்தகுதிகளைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

24 /2017. [1][**மேலும் வரம்புரையாக: (1)** ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்பட்டவாறு குறைந்தஅளவு தகுதிப்பாடுகள் உடையவரல்லாதவரான, **2015** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **31** ஆம் நாளன்றுள்ளவாறு அமர்த்தப்பெற்ற அல்லது பதவியிலுள்ள ஒவ்வோர் ஆசிரியரும் இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமை **(திருத்தம்)** சட்டம், **2017** இன் தொடக்கத் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகள் காலஅளவு ஒன்றுக்குள் அத்தகைய குறைந்த அளவு தகுதிப்பாடுகளை அடையப்பெறுதல் வேண்டும்].

**(3)** ஆசிரியர்களுக்கு வழங்கத்தக்கதான வரையூதியமும் படித்தொகைகளும் மற்றும் அவர்களுடைய பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்களின் கடமைகள் மற்றும் குறைகளைத் தீர்த்து வைத்தல்.

**24. (1). 23** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி பணியமர்த்தம் செய்யப்பட்ட ஆசிரியர் ஒருவர், பின்வரும் கடமைகளைப் புரிதல் வேண்டும், அவையாவன:—

(அ) பள்ளிக்கு வருகை தருவதில் ஒழுங்குமுறையையும், காலந்தவறாமையையும் பேணி வருதல்;

(ஆ) **29** ஆம் பிரிவின் **(2)** ஆம் உட்பிரிவின் வகையங்களுக்கு இணங்க, பாடத்திட்டத்தினை நடத்துதல் மற்றும் முடித்தல்;

(இ) குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பாடத்திட்டம் முழுவதையும் முடித்தல்;

---

1. சட்ட எண் 24/2017 இன் 2 ஆம் பிரிவினால் (01–04–2015 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(d) assess the learning ability of each child and accordingly supplement additional instructions, if any, as required;

(e) hold regular meetings with parents and guardians and apprise them about the regularity in attendance, ability to learn, progress made in learning and any other relevant information about the child; and

(f) perform such other duties as may be prescribed.

(*2*) A teacher committing default in performance of duties specified in sub-section (*1*), shall be liable to disciplinary action under the service rules applicable to him or her:

Provided that before taking such disciplinary action, reasonable opportunity of being heard shall be afforded to such teacher.

(3) The grievances, if any, of the teacher shall be redressed in such manner as may be prescribed.

Pupil-Teacher Ratio.

25. (*1*) [1][Within three years] from the date of commencement of this Act, the appropriate Government and the local authority shall ensure that the Pupil-Teacher Ratio, as specified in the Schedule, is maintained in each school.

(2) For the purpose of maintaining the Pupil-Teacher Ratio under sub-section (1), no teacher posted in a school shall be made to serve in any other school or office or deployed for any non-educational purpose, other than those specified in section 27.

---

1. Subs. by Act 30 of 2012, s. 7, for "Within six months" (w.e.f. 1-8-2012).

(ஈ) குழந்தை ஒவ்வொன்றின் படிப்புத் திறமையை மதிப்பீடு செய்தல் மற்றும் அதற்கிணங்க துணையான, வேண்டுறுத்தப்படுகிற கூடுதல் போதனை, ஏதேனுமிருப்பின், அதனை வழங்குதல்;

(உ) பெற்றோர் மற்றும் காப்பாளர்களுடன் முறையான கூட்டங்கள் நடத்துதல் மற்றும் வருகை தருவதில் ஒழுங்குமுறை, படிப்பதற்கான திறமை, படிப்பில் செய்துள்ள முன்னேற்றம் மற்றும் குழந்தை பற்றிய தொடர்புடைய பிற தகவலினை அவர்களுக்குத் தெரிவித்தல்; மற்றும்

(ஊ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற கடமைகளைப் புரிதல்.

(2) ஆசிரியர் ஒருவர், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கடமைகளைப் புரிகையில் தவறுகை புரிந்தால், அவருக்கு அல்லது அவளுக்குப் பொருந்தத்தக்க பணி விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்:

**வரம்புரையாக:** அத்தகைய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பு, அத்தகைய ஆசிரியருக்கு கேட்கப்படுவதற்கான தகுமான வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) ஆசிரியரின் குறைகள் எவையேனுமிருப்பின், அவை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும்.

மாணவர் ஆசிரியர் விகிதம்.

**25.** (1) இந்தச் சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து [1][மூன்று ஆண்டுகளுக்குள்] உரிய அரசு மற்றும் உள்ளாட்சி அதிகாரஅமைப்பு, மாணவர்–ஆசிரியர் விகிதம், இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு, ஒவ்வொரு பள்ளியிலும் பேணிவரப்படுகிறது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி மாணவர்–ஆசிரியர் விகிதத்தினைப் பேணிவரும் நோக்கத்திற்காக, பள்ளி ஒன்றில் பணியமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர் எவரும், பிற பள்ளி எதிலும் அல்லது அலுவலகம் எதிலும் பணிபுரியுமாறு அல்லது 27 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத பிற கல்வி சாராத நோக்கம் எதற்காகவும் ஈடுபடச் செய்தல் ஆகாது.

---

1. சட்ட எண் 30/ 2012 இன் 7 ஆம் பிரிவினால் "ஆறு மாதங்களுக்குள்" என்பதற்கு மாற்றாக (01–08–2012 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

Filling up vacancies of teachers.

26. The appointing authority, in relation to a school established, owned, controlled or substantially financed by funds provided directly or indirectly by the appropriate Government or by a local authority, shall ensure that vacancy of teacher in a school under its control shall not exceed ten percent of the total sanctioned strength.

Prohibition of deployment of teachers for non-educational purposes.

27**.** No teacher shall be deployed for any non-educational purposes other than the decennial population census, disaster relief duties or duties relating to elections to the local authority or the State Legislatures or Parliament, as the case may be.

Prohibition of private tuition by teacher.

28. No teacher shall engage himself or herself in private tuition or private teaching activity.

## CHAPTER V

## CURRICULUM AND COMPLETION OF ELEMENTARY EDUCATION

Curriculum and evaluation procedure.

29**. (**1) The curriculum and the evaluation procedure for elementary education shall be laid down by an academic authority to be specified by the appropriate Government, by notification.

(2) The academic authority, while laying down the curriculum and the evaluation procedure under sub-section (1), shall take into consideration the following, namely:—

(*a*) conformity with the values enshrined in the Constitution;

(b) all round development of the child;

(c) building up child's knowledge, potentiality and talent;

(d) development of physical and mental abilities to the fullest extent;

**26.** பணியமர்த்தம் செய்யும் அதிகாரஅமைப்பு, உரிய அரசால் அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒன்றினால் நிறுவப்பட்ட, அதற்குச் சொந்தமான, அதன் கட்டாளுகையிலுள்ள அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ வகை செய்யப்பட்ட நிதியங்கள் வாயிலாக கணிசமாக நிதியளிப்புச் செய்யப்பட்ட பள்ளி ஒன்று தொடர்பாக, அதனுடைய கட்டாளுகையின்கீழ் உள்ள பள்ளி ஒன்றிலுள்ள ஆசிரியர் காலியிடம், ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில் பத்து விழுக்காட்டிற்கு மிகையாக இருக்கவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் காலியிடங்களை நிரப்புதல்.

**27.** ஆசிரியர் எவரும், பத்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு, பேரழிவு தீருதவி கடமைகள் அல்லது நேர்வுக்கேற்ப, உள்ளாட்சி அதிகாரஅமைப்பு அல்லது மாநில சட்டமன்றப்பேரவை அல்லது நாடாளுமன்றத்திற்கான தேர்தல்கள் தொடர்பான கடமைகள் அல்லாத பிற கல்வி சாராத நோக்கங்களுக்காக அனுப்பப்படுதல் ஆகாது.

கல்வி சாராத நோக்கங்களுக்காக ஆசிரியர்களை அனுப்புவதற்குத் தடை.

**28.** ஆசிரியர் எவரும், அவராகவோ, அவளாகவோ சொந்தமாக தனிப் போதனை அல்லது சொந்தமாக கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஆகாது.

ஆசிரியர்களால் சொந்தமாக தனி போதனை செய்வதற்குத் தடை.

## அத்தியாயம் V

## தொடக்கக்கல்வி பாடத்திட்டம் மற்றும் அதனை முடித்தல்

**29.** (1) தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டம் மற்றும் கணிப்பாய்வு நெறிமுறை, உரிய அரசால் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கப்படும் கல்வி அதிகாரஅமைப்பு ஒன்றினால் விதிக்கப்படுதல் வேண்டும்.

பாடத்திட்டம் மற்றும் கணிப்பாய்வு நெறிமுறை.

(2) கல்வி அதிகாரஅமைப்பு, (1) ஆம் உட்பிரிவின்படி பாடத்திட்டம் மற்றும் கணிப்பாய்வு நெறிமுறையினை விதிக்கையில், பின்வருவனற்றைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும், அவையாவன:—

(அ) அரசமைப்பில் பேணப்பட்டுள்ள மதிப்புகளுக்கு இணங்கியிருத்தல்;

(ஆ) குழந்தையின் முழுமையான வளர்ச்சி;

(இ) குழந்தையுடைய அறிவு, இயல்திறம் மற்றும் தனித்திறமையை உண்டுபண்ணுதல்;

(ஈ) உடல் மற்றும் மன ஆற்றலை முழுமையான அளவிற்கு மேம்படுத்ததுல்;

(e) learning through activities, discovery and exploration in a child friendly and child-centered manner;

(f) medium of instructions shall, as far as practicable, be in child's mother tongue;

(g) making the child free of fear, trauma and anxiety and helping the child to express views freely;

(h) comprehensive and continuous evaluation of child's understanding of knowledge and his or her ability to apply the same.

Examination and completion certificate.

30. (1) No child shall be required to pass any Board examination till completion of elementary education.

(2) Every child completing his elementary education shall be awarded a certificate, in such form and in such manner, as may be prescribed.

## CHAPTER VI

## PROTECTION OF RIGHT OF CHILDREN

Monitoring of child's right to education.

31. (1) The National Commission for Protection of Child Rights constituted under section 3, or, as the case may be, the State Commission for Protection of Child Rights constituted under section 17, of the Commissions for Protection of Child Rights Act, 2005 shall, in addition to the functions assigned to them under that Act, also perform the following functions, namely:— 4 /2006.

(a) examine and review the safeguards for rights provided by or under this Act and recommend measures for their effective implementation;

(b) inquire into complaints relating to child's right to free and compulsory education; and

(உ) குழந்தை நேசம் மற்றும் குழந்தையை மையமாகக் கொண்ட முறையில் செயல்கள், தெரிந்துகொள்ளுதல் மற்றும் ஆய்வு செய்தல் வாயிலாகக் கற்றல்;

(ஊ) போதனை மொழி, இயலுமளவிற்கு குழந்தையின் தாய் மொழியில் இருத்தல் வேண்டும்;

(எ) குழந்தையை பயமின்றி, உணர்வதிர்ச்சியின்றி, கவலையின்றி இருக்கச் செய்தல் மற்றும் குழந்தை அதனுடைய கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்லுவதற்கு உதவுதல்;

(ஏ) குழந்தையின் புரிந்து கொள்ளும் அறிவுத்திறன் மற்றும் அதனைச் செலுத்துவதற்கு அவனுடைய அல்லது அவளுடைய திறமையினை விரிவான மற்றும் தொடர் மதிப்பீடு செய்தல்.

தேர்வு மற்றும் முடித்தலுக்கான சான்றிதழ்.

**30.** (1) குழந்தை எதுவும், தொடக்கக் கல்வியினை முடிக்கும் வரையில், வாரியத்தேர்வு எதிலும் தேர்ச்சி பெறுமாறு வேண்டுறுத்தப்படுதல் ஆகாது.

(2) தன்னுடைய தொடக்கக் கல்வியினை முடித்துள்ள குழந்தை ஒவ்வொன்றுக்கும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும் சான்றிதழ் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

## குழந்தைகளின் உரிமையினைப் பாதுகாத்தல்

கல்விக்கான குழந்தையினுடைய உரிமையை கண்காணித்தல்.

**31.** (1) 3 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம், அல்லது, நேர்வுக்கேற்ப, 2005 ஆம் ஆண்டு குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையங்கள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநில ஆணையம், அந்தச் சட்டத்தின்படி அவைகளுக்குக் குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளுக்குக் கூடுதலாக, பின்வரும் செயற்பணிகளைப் புரிதல் வேண்டும், அவையாவன:—

4/2006.

(அ) இந்தச் சட்டத்தாலோ, அதன்வழியாலோ வகைசெய்யப்பட்டுள்ள உரிமைகளுக்கான பாதுகாப்பினை ஆராய்வு மற்றும் ஆய்வு செய்தல் மற்றும் அவைகள் திறம்பட செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்தல்;

(ஆ) இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தையின் உரிமை தொடர்பான முறையீடுகளை விசாரணை செய்தல்; மற்றும்

(c) take necessary steps as provided under sections 15 and 24 of the said Commissions for Protection of Child Rights Act.

(2) The said Commissions shall, while inquiring into any matters relating to child's right to free and compulsory education under clause (c) of sub-section (1), have the same powers as assigned to them respectively under sections 14 and 24 of the said Commissions for Protection of Child Rights Act.

(3) Where the State Commission for Protection of Child Rights has not been constituted in a State, the appropriate Government may, for the purpose of performing the functions specified in clauses (a) to (c) of sub-section (1), constitute such authority, in such manner and subject to such terms and conditions, as may be prescribed.

Redressal of grievances.

32. (1) Notwithstanding anything contained in section 31, any person having any grievance relating to the right of a child under this Act may make a written complaint to the local authority having jurisdiction.

(2) After receiving the complaint under sub-section (1), the local authority shall decide the matter within a period of three months after affording a reasonable opportunity of being heard to the parties concerned.

(3) Any person aggrieved by the decision of the local authority may prefer an appeal to the State Commission for Protection of Child Rights or the authority prescribed under sub-section (3) of section 31,as the case may be.

(4) The appeal preferred under sub-section (3) shall be decided by State Commission for Protection of Child Rights or the authority prescribed under sub-section (3) of section 31, as the case may be, as provided under clause (c) of sub-section (1) of section 31.

(இ) கூறப்பட்ட குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையங்கள் சட்டத்தின் 15 மற்றும் 24 ஆம் பிரிவுகளின்படி வகைசெய்யப்பட்டவாறு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(2) கூறப்பட்ட ஆணையங்கள், (1) ஆம் உட்பிரிவின் (இ) கூறின்படி இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தையின் உரிமை தொடர்பான பொருட்பாடுகள் எவற்றையும் விசாரணை செய்கையில், கூறப்பட்ட குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையங்கள் சட்டத்தின் 14 மற்றும் 24 ஆம் பிரிவுகளின்படி முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள அதே அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) மாநிலம் ஒன்றில், குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநில ஆணையம் அமைக்கப்பட்டிராதவிடத்து, உரிய அரசு, (1) ஆம் உட்பிரிவின் (அ) முதல் (இ) முடியவுள்ள கூறுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பணிகளைப் புரியும் நோக்கத்திற்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரஅமைப்பினை, அத்தகைய முறையிலும் அத்தகைய வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும் அமைக்கலாம்.

குறைகளைத் தீர்த்து வைத்தல்.

32. (1). 31 ஆம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படி குழந்தை ஒன்றின் உரிமை தொடர்பான குறை எதனையும் கொண்டுள்ள நபர் எவரும், அதிகாரவரம்பைக் கொண்டுள்ள உள்ளாட்சி அதிகாரஅமைப்பிற்கு எழுத்து வடிவிலான முறையீடு ஒன்றைச் செய்யலாம்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி முறையீடு ஒன்றைப் பெற்ற பின்பு, உள்ளாட்சி அதிகாரஅமைப்பு, தொடர்புடைய தரப்பினர்களுக்கு கேட்கப்படுவதற்கான தகுமான வாய்ப்பு ஒன்றை வழங்கிய பின்பு, மூன்று மாதங்கள் கால அளவு ஒன்றுக்குள் பொருட்பாட்டினை முடிபு செய்தல் வேண்டும்.

(3) உள்ளாட்சி அதிகாரஅமைப்பின் முடிபினால் குறையுற்ற நபர் எவரும், குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநில ஆணையத்திற்கு, அல்லது நேர்வுக்கேற்ப, 31 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பிற்கு, மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்யலாம்.

(4). (3) ஆம் உட்பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு, குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநில ஆணையத்தினால், அல்லது நேர்வுக்கேற்ப, 31 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பினால், 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) கூறில் வகை செய்யப்பட்டுள்ளவாறு முடிபு செய்யப்படுதல் வேண்டும்.

Constitution of National Advisory Council.

33. (1) The Central Government shall constitute, by notification, a National Advisory Council, consisting of such number of Members, not exceeding fifteen, as the Central Government may deem necessary, to be appointed from amongst persons having knowledge and practical experience in the field of elementary education and child development.

(2) The functions of the National Advisory Council shall be to advise the Central Government on implementation of the provisions of the Act in an effective manner

(3) The allowances and other terms and conditions of the appointment of Members of the National Advisory Council shall be such as may be prescribed.

Constitution of State Advisory Council.

34. (1) The State Government shall constitute, by notification, a State Advisory Council consisting of such number of Members, not exceeding fifteen, as the State Government may deem necessary, to be appointed from amongst persons having knowledge and practical experience in the field of elementary education and child development.

(2) The functions of the State Advisory Council shall be to advise the State Government on implementation of the provisions of the Act in an effective manner.

(3) The allowances and other terms and conditions of appointment of Members of the State Advisory Council shall be such as may be prescribed.

## CHAPTER VII

## MISCELLANEOUS

Power to issue directions.

35. (1) The Central Government may issue such guidelines to the appropriate Government or, as the case may be, the local authority, as it deems fit for the purposes of implementation of the provisions of this Act.

(2) The appropriate Government may issue guidelines and give such directions, as it deems fit, to the local authority or the School Management Committee regarding implementation of the provisions of this Act.

**33. (1)** மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, தொடக்கக் கல்வி மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறையில் தனியறிவும், செயலுறு பட்டறிவும் கொண்ட நபர்களுக்கிடையேயிருந்து அமர்த்தப்படும் மைய அரசு தேவையெனக் கருதலாகும் பதினைந்திற்கும் மிகையாகாத அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட தேசியத் தேர்வுரை மன்றம் ஒன்றை அமைத்தல் வேண்டும். தேசியத் தேர்வுரை மன்றத்தை அமைத்தல்.

(2) திறம்பட்ட முறையில், இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செயற்படுத்துவதற்கு மைய அரசுக்குத் தேர்வுரை வழங்குவது தேசியத் தேர்வுரை மன்றத்தின் செயற்பணிகளாக இருக்கும்.

(3) தேசியத் தேர்வுரை மன்றத்தின் உறுப்பினர்களின் படித்தொகைகள் மற்றும் பணியமர்த்த வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

**34. (1)** மாநில அரசு, அறிவிக்கை வாயிலாக, தொடக்கக் கல்வி மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறையில் தனியறிவும், செயலுறு பட்டறிவும் கொண்ட நபர்களுக்கிடையேயிருந்து அமர்த்தப்படும், மாநில அரசு, தேவையெனக் கருதலாகும் பதினைந்திற்கும் மிகையாகாத அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட மாநிலத் தேர்வுரை மன்றம் ஒன்றை அமைத்தல் வேண்டும். மாநிலத் தேர்வுரை மன்றத்தை அமைத்தல்.

(2) திறம்பட்ட முறையில் இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செயற்படுத்துவதற்கு மாநில அரசுக்குத் தேர்வுரை வழங்குவது மாநிலத் தேர்வுரை மன்றத்தின் செயற்பணிகளாக இருக்கும்.

(3) மாநிலத் தேர்வுரை மன்றத்தின் உறுப்பினர்களின் படித்தொகைகள் மற்றும் பணியமர்த்த வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் VII

### பல்வகை

**35. (1)** மைய அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செயற்படுத்தும் நோக்கங்களுக்காக, அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய வழிகாட்டு நெறிகளை உரிய அரசுக்கு, அல்லது, நேர்வுக்கேற்ப, உள்ளாட்சி அதிகாரஅமைப்பிற்கு வழங்கலாம். பணிப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரம்.

(2) உரிய அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செயற்படுத்துவது குறித்து உள்ளாட்சி அதிகாரஅமைப்பிற்கு அல்லது பள்ளி மேலாண்மை குழுவிற்கு, அது பொருத்தமெனக் கருதலாகும் வழிகாட்டுநெறிகளை வழங்கலாம் மற்றும் அத்தகைய பணிப்புரைகளைக் கொடுக்கலாம்.

(3) The local authority may issue guidelines and give such directions, as it deems fit, to the School Management Committee regarding implementation of the provisions of this Act.

Previous sanction for prosecution.

36. No prosecution for offences punishable under sub-section (*2*) of section 13, sub-section (*5*) of section 18 and sub-section (*5*) of section 19 shall be instituted except with the previous sanction of an officer authorised in this behalf, by the appropriate Government, by notification.

Protection of action taken in good faith.

37. No suit or other legal proceeding shall lie against the Central Government, the State Government, the National Commission for Protection of Child Rights, the State Commission for Protection of Child Rights, the local authority, the School Management Committee or any person, in respect of anything which is in good faith done or intended to be done, in pursuance of this Act, or any rules or order made thereunder.

Power of appropriate Government to make rules.

38**.** (1) The appropriate Government may, by notification, make rules, for carrying out the provisions of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing powers, such rules may provide for all or any of the following matters, namely:—

(a) the manner of giving special training and the time-limit thereof, under first proviso to section 4;

(b) the area or limits for establishment of a neighbor hood school, under section 6;

(c) the manner of maintenance of records of children up to the age of fourteen years, under clause (d) of section 9;

(d) the manner and extent of reimbursement of expenditure, under sub-section (2) of section 12;

(e) any other document for determining the age of child under sub-section (1) of section 14;

(3) உள்ளாட்சி அதிகாரஅமைப்பு, இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செயற்படுத்துவது குறித்து பள்ளி மேலாண்மை குழுவிற்கு, அது பொருத்தமெனக் கருதலாகும் வழிகாட்டுநெறிகளை வழங்கலாம் மற்றும் அத்தகைய பணிப்புரைகளைக் கொடுக்கலாம்.

**36.** 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி, 18 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்படி, 19 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல்களுக்காக, குற்றவழக்கு எதுவும், உரிய அரசால் அறிவிக்கை வாயிலாக இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் முன் ஒப்பளிப்புடன் அல்லாமல், தொடரப்படுதல் ஆகாது.

குற்றவழக்கு தொடர்வதற்கு முன் ஒப்பளிப்பு.

**37.** மைய அரசு, மாநில அரசு, குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம், குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநில ஆணையம், உள்ளாட்சி அதிகாரஅமைப்பு, பள்ளி மேலாண்மைக் குழு அல்லது நபர் எவருக்கும் எதிராக, இந்தச் சட்டத்தினை அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது ஆணை எதனையும் தொடர்ந்து நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனையும் பொறுத்து, உரிமைவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**38.** (1) உரிய அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

விதிகளைச் செய்வதற்கு உரிய அரசுக்குள்ள அதிகாரம்.

(2) குறிப்பாகவும், முன்சென்ற அதிகாரங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:—

(அ) 4 ஆம் பிரிவின் முதல் வரம்புரையின்படி, சிறப்புப் பயிற்சி கொடுக்கப்படும் முறை மற்றும் அதற்கான கால வரம்பு;

(ஆ) 6 ஆம் பிரிவின்படி சுற்றுப்புறத்திலுள்ள பள்ளி ஒன்றை நிறுவுவதற்கான வரையிடம் அல்லது வரம்புகள்;

(இ) 9 ஆம் பிரிவின் (ஈ) கூறின்படி பதினான்கு வயது வரையுள்ள குழந்தைகளின் பதிவணங்கள் பேணி வரப்படும் முறை;

(ஈ) 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி செலவினங்களை மீளப் பெறுவதற்கான முறை மற்றும் அளாவுகை;

(உ) 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி குழந்தையின் வயதினை தீர்மானிப்பதற்கான பிற ஆவணம் எதுவும்;

(f) the extended period for admission and the manner of completing study if admitted after the extended period, under section 15;

[1][(fa) the manner and the conditions subject to which a child may be held back under sub-section (3) of section 16;]

(g) the authority, the form and manner of making application for certificate of recognition, under sub-section (1) of section 18;

(h) the form, the period, the manner and the conditions for issuing certificate of recognition, under sub-section (2) of section 18;

(i) the manner of giving opportunity of hearing under second proviso to sub-section (3) of section 18;

(j) the Other functions to be performed by School Management Committee under clause (d) of sub-section (2) of section 21;

(k) the manner of preparing School Development Plan under sub-section (1) of section 22;

(l) the salary and allowances payable to, and the terms and conditions of service of teacher, under sub-section (3) of section 23;

(m) the duties to be performed by the teacher under clause (f) of sub-section (1) of section 24;

(n) the manner of redressing grievances of teachers under sub-section (3) of section 24;

(o) the form and manner of awarding certificate for completion of elementary education under sub-section (2) of section 30;

(p) the authority, the manner of its constitution and the terms and conditions therefor, under sub-section (3) of section 31;

(q) the allowances and other terms and conditions of appointment of Members of the National Advisory Council under sub-section (3) of section 33;

---

1. Ins. by Act 1 of 2019, s.2 (w.e.f. 01- 03- 2019).

(ஊ) 15 ஆம் பிரிவின்படி சேர்த்துக் கொள்வதற்காக நீட்டிக்கப்பட்ட கால அளவு மற்றும் நீட்டிக்கப்பட்ட கால அளவுக்குப் பின்பு சேர்த்துக் கொள்ளப்படுமாயின், படிப்பினை நிறைவு செய்யும் முறை;

[1][(ஊஅ) 16 ஆம் பிரிவின், (3) ஆம் உட்பிரிவின்படி எந்த முறையிலும் எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும் ஒரு குழந்தை நிறுத்தி வைக்கப்படலாம் என்பது;]

(எ) 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அங்கீகாரச் சான்றிதழுக்கான விண்ணப்பம் செய்யும் அதிகாரஅமைப்பு, படிவம் மற்றும் முறை;

(ஏ) 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி அங்கீகாரச் சான்றிதழ் வழங்குவதற்கான படிவம், கால அளவு, முறை மற்றும் வரைக்கட்டுகள்;

(ஐ) 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையின்படி கேட்கப்படுவதற்கான வாய்ப்பு கொடுக்கப்படும் முறை;

(ஒ) 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) கூறின்படி பள்ளி மேலாண்மைக் குழுவினால் புரியப்பட வேண்டிய பிற செயற்பணிகள்;

(ஓ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி பள்ளி வளர்ச்சித்திட்டம் தயாரிக்கப்படும் முறை;

(ஔ) 23 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி ஆசிரியருக்கு வழங்கத்தக்க வரையூதியம் மற்றும் படித்தொகைகள் மற்றும் பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள்;

(க) 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) கூறின்படி ஆசிரியரால் புரியப்பட வேண்டிய கடமைகள்;

(ங) 24 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி ஆசிரியர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும் முறை;

(ச) 30 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி தொடக்கக் கல்வியை முடித்தலுக்கான சான்றிதழ் வழங்கப்படும் படிவம் மற்றும் முறை;

(ஞ) 31 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படியான அதிகாரஅமைப்பு, அதனுடைய அமைப்பு முறை மற்றும் அதற்கான வரையுரைகளும் வரைக்கட்டுகளும்;

(ட) 33 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி தேசிய தேர்வுரை மன்றத்தின் உறுப்பினர்களின் படித்தொகைகள் மற்றும் பிற பணியமர்த்த வரையுரைகளும் வரைக்கட்டுகளும்;

---

1. சட்ட எண் 1/2019 இன் 2 ஆம் பிரிவினால் (01–03–2019 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(r) the allowances and other terms and conditions of appointment of Members of the State Advisory Council under sub-section (3) of section 34.

(3) Every rule made under this Act and every notification issued under sections 20 and 23 by the Central Government shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the rule or notification or both Houses agree that the rule or notification should not be made, the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification.

(*4*) Every rule or notification made by the State Government under this Act shall be laid, as soon as may be after it is made; before the State Legislatures.

Power of Central Government to remove difficulties.

[1][**39.** (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order, published in the Official Gazette, make such provisions not inconsistent with the provisions of this Act, as may appear to it to be necessary for removing the difficulty:

Provided that no order shall be made under this section after the expiry of three years from the commencement of the Right of Children to Free and Compulsory Education (Amendment) Act, 2012. 30 / 2012.

(2) Every order made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament.]

1. Ins. by Act 30 of 2012, s. 8 (w.e.f. 1-8-2012).

(ண) 34 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி மாநிலத் தேர்வுரை மன்றத்தின் உறுப்பினர்களின் படித்தொகைகள் மற்றும் பிற பணியமர்த்த வரையுரைகளும் வரைக்கட்டுகளும்.

(3) இந்தச் சட்டத்தின்படி மைய அரசால் செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், 20 மற்றும் 23 ஆம் பிரிவுகளின்படி வெளியிடப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத் தொடராகவோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ, முப்பது நாட்களைக் கொண்ட ஒரு மொத்தக் கால அளவிற்கு அமர்வில் இருக்கையில் அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரினை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் அல்லது அறிவிக்கையில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி அல்லது அறிவிக்கை அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும், எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி மாநில அரசால் செய்யப்படும் விதி அல்லது அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், மாநில சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்க மைய அரசிற்குள்ள அதிகாரம்.

[1][39(1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மையஅரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின் வழி, இடர்ப்பாடுகளை அகற்றுவதற்குத் தேவையெனத் தோன்றலாகும், இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் முரண்படாத அத்தகைய வகையங்களைச் செய்யலாம்:

**வரம்புரையாக:** இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான
30 / 2012. குழந்தைகளின் உரிமை (திருத்தம்) சட்டம், 2012 இன் தொடக்கநிலையிலிருந்து மூன்று ஆண்டுகள் கழிவுற்ற பின்பு இந்தப் பிரிவின்படி ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.]

---

1. சட்ட எண் 30/2012 இன் 8 ஆம் பிரிவினால் (01–08–2012 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

## THE SCHEDULE

(See sections 19 and 25)

## NORMS AND STANDARDS FOR A SCHOOL

| Sl. No. | Item | Norms and | Standards |
|---|---|---|---|
| 1. | Numbers of teachers: | | |
| | (a) For first class to fifth class | Admitted children | Number of teachers |
| | | Up to Sixty | Two |
| | | Between sixty-one to ninety | Three |
| | | Between Ninety-one to one hundred and twenty | Four |
| | | Between One hundred and twenty-one to two hundred | Five |
| | | Above One hundred and fifty children | Five plus one Head teacher |
| | | Above Two hundred children | Pupil-Teacher Ratio (excluding Head teacher) shall not exceed forty. |
| | (b) For sixth class to eighth class | (1) At least one teacher per class so that there shall be at least one teacher each for— | |

## இணைப்புப்பட்டியல்

(19 மற்றும் 25 ஆம் பிரிவுகளைக் காண்க)

## பள்ளி ஒன்றிற்கான நெறிமுறைகள் மற்றும் தரங்கள்

| வரிசை எண் | இனம் | நெறிமுறைகள் மற்றும் | தரங்கள் |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர்களின் எண்ணிக்கை: | | |
| | (அ) முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் உள்ளவற்றிற்கு | சேர்த்துக்கொள்ளப்பட்ட குழந்தைகள் | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
| | | அறுபது வரையில் | இரண்டு |
| | | அறுபத்தொன்றிற்கும் தொண்ணூறுக்கும் இடையே | மூன்று |
| | | தொண்ணூற்று ஒன்றுக்கும் நூற்று இருபதுக்கும் இடையே | நான்கு |
| | | நூற்று இருபத்து ஒன்றுக்கும் இரு நூறுக்கும் இடையே | ஐந்து |
| | | நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் | ஐந்தும் தலைமை ஆசிரியர் ஒருவரும் |
| | | இருநூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் | (தலைமை ஆசிரியர் நீங்கலாக) மாணவர் ஆசிரியர் விகிதம் நாற்பதுக்கு மிகையாதல் ஆகாது. |
| | (ஆ) ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரையில் உள்ளவற்றிற்கு | **(1)** வகுப்பு ஒன்றிற்கு குறைந்தது ஒரு ஆசிரியர், எனவே பின்வரும் பாடங்கள் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது ஒரு ஆசிரியராவது இருத்தல் வேண்டும்— | |

| Sl. No. | Item | Norms and Standards |
|---|---|---|
| | | (i) Science and Mathematics;<br>(ii) Social Studies;<br>(iii) Languages.<br>(2) At least one teacher for every thirty-five children.<br>(3) Where admission of children is above one hundred—<br>(i) a full time head-teacher;<br>(ii) part time instructors for—<br>(A) Art Education;<br>(B) Health and Physical Education;<br>(C) Work Education |
| 2. | Building | All-weather building consisting of—<br>(i) at least one class-room for every teacher and an office-cum-store-cum-Head teacher's room;<br>(ii) barrier-free access;<br>(iii) separate toilets for boys and girls;<br>(iv) safe and adequate drinking water facility to all children;<br>(v) a kitchen where mid-day meal is cooked in the school;<br>(vi) Playground;<br>(vii) arrangements for securing the school building by boundary wall or fencing. |

| வரிசை எண் | இனம் | நெறிமுறைகள் மற்றும் தரங்கள் |
| --- | --- | --- |
| | | (i) அறிவியல் மற்றும் கணிதம்;<br>(ii) சமூகவியல்;<br>(iii) தாய்மொழிப் பாடங்கள்.<br>(2) முப்பத்து ஐந்து குழந்தைகளுக்கு குறைந்தது ஒரு ஆசிரியர்.<br>(3) குழந்தைகளின் சேர்க்கை நூறுக்கும் அதிகமாக இருக்கிறவிடத்து—<br>(i) முழுநேர தலைமை ஆசிரியர் ஒருவர்;<br>(ii) பின்வருவனவற்றிற்குப் பகுதிநேர போதனையாளர்கள்—<br>(அ) கலைக் கல்வி;<br>(ஆ) சுகாதாரம் மற்றும் உடற்பயிற்சி கல்வி;<br>(இ) தொழிற்கல்வி. |
| 2. | கட்டடம் | அனைத்து இயனிலை மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட்ட பின்வருவனவற்றை உள்ளடக்கிய கட்டடம்—<br>(i) ஒவ்வொரு ஆசிரியருக்கும் குறைந்தது ஒரு வகுப்பு அறை மற்றும் அலுவலக உடன் பண்டகசாலை உடன் தலைமை—ஆசிரியருடைய அறை ஒன்று;<br>(ii) தடையின்றி எளிதில் அனுகுதல்;<br>(iii) சிறுவர்கள் மற்றும் சிறுமியர்களுக்கான தனித்தனி கழிப்பிட வசதி;<br>(iv) அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாப்பான, தாராளமான குடிநீர் வசதி;<br>(v) பள்ளியில் மதிய உணவு சமையல் செய்யப்படுகிறவிடத்து, சமையலறை ஒன்று;<br>(vi) விளையாட்டுத் திடல்;<br>(vii) எல்லைச் சுவர்களினால் அல்லது வேலியினால் பள்ளிகட்டிடம் பாதுகாக்கப்படுவதற்கான ஏற்பாடுகள். |

| Sl. No. | Item | Norms and Standards |
|---|---|---|
| 3. | Minimum number of working days/instructional hours in an academic year | (i) two hundred working days for first class to fifth class;<br>(ii) two hundred and twenty working days for sixth class to eighth class;<br>(iii) eight hundred instructional hours per academic year for first class to fifth class;<br>(iv) one thousand instructional hours per academic year for sixth class to eighth class. |
| 4. | Minimum number of working hours per week for the teacher | forty-five teaching including preparation hours. |
| 5. | Teaching learning equipment | Shall be provided to each class as required. |
| 6. | Library | There shall be a library in each school providing newspaper, magazines and books on all subjects, including story-books. |
| 7. | Play material, games and sports equipment | Shall be provided to each class as required. |

| வரிசை எண் | இனம் | நெறிமுறைகள் மற்றும் தரங்கள் |
| --- | --- | --- |
| 3. | கல்வி ஆண்டு ஒன்றில் வேலை நாட்களின் குறைந்தஅளவு எண்ணிக்கை / போதனை மணிநேரங்கள் | (i) முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் உள்ளவர்களுக்கு இரு நூறு வேலை நாட்கள்;<br>(ii) ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையில் உள்ளவர்களுக்கு இரு நூற்று இருபது வேலை நாட்கள்;<br>(iii) முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் உள்ளவர்களுக்கு கல்வி ஆண்டு ஒன்றிற்கு எண்ணூறு போதனை மணி நேரங்கள்;<br>(iv) ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையில் உள்ளவர்களுக்கு கல்விஆண்டு ஒன்றிற்கு ஆயிரம் போதனை மணி நேரங்கள். |
| 4. | ஆசிரியருக்கு வாரம் ஒன்றிற்கு குறைந்த அளவு வேலை மணி நேரங்கள் | ஆயத்தப்படுதலுக்கான மணி நேரங்கள் உள்ளடங்கலாக நாற்பத்து ஐந்து கற்பித்தல். |
| 5. | கற்பித்தலை கற்றுக் கொள்வதற்கான சாதனம் | தேவைப்படுகிறவாறு ஒவ்வொரு வகுப்பிற்கும் வழங்கப்படுதல் வேண்டும். |
| 6. | நூலகம் | செய்தித்தாள், வார, மாதப் பத்திரிக்கைகள் மற்றும் கதை புத்தகங்கள் உள்ளடங்கலாக அனைத்துப் பாடங்களிலுமுள்ள புத்தகங்கள் வழங்கும் வகையில் ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் ஒன்று இருத்தல் வேண்டும். |
| 7. | விளையாட்டுப் பொருட்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் பந்தயங்களுக்கான சாதனங்கள் | தேவைப்படுகிறவாறு அனைத்து வகுப்புகளுக்கும் வழங்கப்படுதல் வேண்டும். |